பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 1 திங்கட்கிழமை (15.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 201

## அகதிகளை மீளக்குடியமர்த்தும் வரை

# வடக்கு உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கக் கோருகிறது கூட்டமைப்பு

## ஜனாதிபதிக்கு வெள்ளியன்று கடிதம்

கொழும்பு, ஜூன் 15

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து, வவுனியா அகதி முகாம்களில் தங்கி அவலுறும் மக்களை, அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் வரை -

வடக்கில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்தி வைக்குமாறு - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கைக் கடிதம் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினசிங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.

தேர்தல்களை நடத்துவதற்கு இது உகந்த தருணம் அல்ல என்றும் -

இடம்பெயர்ந்த வன்னி மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தும் வரை எந்தத் தேர்தல்களையும் நடத்துவது பொருத்தமானது அல்ல என்றும் -

ஆகவே யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும், வவுனியா நகர சபைக்கும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள தேர்தல்களை

(16 ஆம் பக்கம் பார்க்க)


## புலிகளின் ஆயுதங்கள் திருமலையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 15

திருகோணமலை மாவட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏராளமான ஆயுதங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில்,

(16 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் அகதிமுகாம்களிலுள்ள தமிழர்களின் விடயத்தில் தலையிடுமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் வேண்டுகோள் விடுக்கும் விதத்தில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் கடந்த சனிக்கிழமை வெள்ளை மாளிகைக்கு முன்னால் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது...

## திருகோணமலை மாவட்டத்தில் இன்று முதல் மீன்பிடித்தடை முற்றாக நீக்கம்

கொழும்பு, ஜூன் 15

போர் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக திருகோணமலை மாவட்டத்தில் விதிக்கப்பட்டிருந்த மீன்பிடிக் கட்டுப்பாடுகள் முற்றாக விலக்கப்பட்டுள்ள தாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த மீன்பிடித் தடைகள் காரணமாக இந்த மாவட்ட மீனவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்துவந்தனர்.

இன்று 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தடைகள் நீக்கப்படுவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் எம்.பியுமான பசில் ராஜ பக்ஷ திருகோண மலையில் இடம்பெற்ற மீனவருடனான சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

திருகோணமலை மாவட்ட மீனவர்கள் இதுவரை பகல் வேளையிலேயே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். புதிய நடைமுறையின் பிரகாரம் அவர்கள் 24 மணி நேரமும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் திருகோணமலை துறைமுகப் பகுதி பாதுகாப்பு வலயத்தில் அமைந்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களில் காணாமற்போகும் இளைஞர்களின் எண்ணிக்கை அச்சம்தரும் அளவுக்கு அதிகரிப்பு

### கவலை தெரிவிக்கிறார் மனித உரிமைப் பணியாளர்

கொழும்பு, ஜூன் 15

மோதல் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் காணாமல் போகும் இளைஞர்களின் எண்ணிக்கை அச்சம் தரும் அளவுக்கு அதிகரித்துள்ளது என இலங்கையைச் சேர்ந்த பிரபல மனித உரிமைப் பணியாளர் சுனிலா அபயசேகர தெரிவித்துள்ளார்.

கனடா ரொரன்ரோவின் ஊடகமொன்றிற்கு அளித்துள்ள பேட்டியிலேயே இலங்கையைச் சேர்ந்த மனித உரிமை விவரங்களை ஆவணப்படுத்தும் 'இன்போர்ம்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுனிலா அபயசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் பட்டினியால் 14 முதியவர்கள் பலி

முகாம்களில் உள்ள 3 லட்சம் மக்களின் நலன்கள் குறித்து அரசு போதிய கவனம் எடுக்கவில்லையெனக் குற்றம் சாட்டியுள்ள அவர், முகாம்களில் உள்ளவர்களை உரிய விதத்தில் பதிவு செய்யும் நடைமுறை இல்லாததால் ஆயுதக்குழுக்களால் இலகுவாக இவர்களைக்கொண்டு செல்ல முடிகின்றது எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

முகாம்களில் உள்ள பலர் வாடி வதங்கியவர்களாகவும், களைத்துப் போனவர்களாகவும், தொற்றுநோய் மற்றும் காயங்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர் உரிமைகளைப் பெறுவதற்கு கூட்டமைப்பு இந்தியாவுடன் இணைந்து செயற்பட விரும்புகிறது

### சம்பந்தன் புதுடில்லியில் தெரிவிப்பு

டில்லி,ஜூன்15

எங்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடன் இணைந்து செயற்பட விரும்புகிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.

இந்தோ ஆசிய செய்திச் சேவைக்கு இந்தத் தகவலை அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காண முயலவேண்டும். இதன் மூலம் மாத்திரமே தமிழர்கள் சிறிதளவு

(02 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் துறையில் 80 ஆயிரம் பேர் ஐந்து மாதங்களில் வேலை இழப்பு!

கொழும்பு, ஜூன் 15

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் தனியார் துறையைச் சேர்ந்த 80 ஆயிரம் பேர் தொழிலை இழந்துள்ளனர் என வேலை இழந்தோருக்கான தேசிய நிலையம் தெரிவித்துள்ளது.

53 ஆடைத் தொழிற்சாலைகள் இவ்வருடம் மூடப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் 100 முதல் 2 ஆயிரம் பேர் வரை தொழில் புரிந்தனர். இதுதவிர வேறு பல தொழிற்றுறையைச் சேர்ந்தவர்கள் [illegible]

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உரிமை கோரப்படாத ஊழியர் சேமலாப நிதியை ஆடைத்தொழிலாளருக்கு நஷ்டஈடாக வழங்கத்திட்டம்

கொழும்பு, ஜூன் 15

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் உள்ள உரிமை கோரப்படாத பல கோடி ரூபாவை ஆடைத் தொழிலாளருக்கு நஷ்டஈடு [illegible] பயன்படுத்த அரசு [illegible] தகவல்கள் வெளியாகி உள்ளன.

தொழில் திணைக்களத்தின் மூத்த அதிகாரியொருவர் இதனை உறுதிசெய்துள்ளார். தமது தொழில் வாய்ப்பை இழந்தவர்களுக்கு நஷ்டஈட்டை வழங்குவதற்காக உரிமை கோரப்படாத ஊழியர் சேம

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**Chundikuli Girls' College**
**Old Girls' Association, Jaffna.**

The Annual General Meeting
And Fellowship Lunch

Date: Saturday 20th June 2009
Venue: College Hall

Agenda

9.00 a.m: Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli.
11.00 a.m: A.G.M
12.30 p.m: Lunch and Games
Lunch Tickets Rs.250

**All Old Girls are cordially invited.**

Secretary.


## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
### 10ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் - 06.07.2009

எமது சங்கத்தின் 10 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 06.07.2009 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் வைத்திய கலாநிதி ந. சிவராஜா தலைமையில் எமது சங்கக் காரியாலயத்தில் ( 100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில்) நடைபெறவுள்ளது.

சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் அங்கத்தவர்கள் பிரேரணைகள் ஏதும் சமர்ப்பிக்க விரும்பின் 30.06.2009ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராக அனுப்பப்பட்ட பிரேரணைகள் மட்டுமே கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

சாதாரண அங்கத்தவர்களாயின் நிலுவையாக உள்ள சந்தாப்பணம் அனைத்தையும் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொண்ட பின்னரே கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

நன்றி

திரு. கே. கோபாலகிருஷ்ணன்
கௌரவ செயலாளர் AROD.



## வருந்துகிறோம்
### அமரர் இராசையா நடராசா

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தாகசாந்தி நிலையத்தின் தூய்மையைப் பேணும் அலங்கரிப்பில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்த நடராசா அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாதாகும். அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
தாகசாந்தி நிலையத்தினர், சுதுமலை தெற்கு.

## மரண அறிவித்தல்
### திருமதி செல்லையா பாறிப்பிள்ளை



எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாறிப்பிள்ளை நேற்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் கந்தையா (கனடா), சுப்பிரமணியம், நல்லம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசம்மா, சரஸ்வதி, தம்பையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்,கோப்பாய் கிறிஸ்தவச் கல்லூரி), பேரின்பராணி, கனகமணி (சுவிஸ்), செல்வரத்தினம் (லண்டன்), சிவராசா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தியாகராசா,காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் தவரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), சாந்தினி, இலங்கைநாதன் (சுவிஸ்), உமாதேவி (லண்டன்), மதிவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரவீந் திரன், ரதிகரன், கேதீஸ்வரன்,குகனேஸ்வரன், சித்திரேஸ்வரன், பிரபாஜினி, மதசங்கர், கஜனி, ஜனகன்,சயந்தன், திலீபன், தீபிகா,டயானி, டிலானி, டனுஷன், நிவேதா, சுவேதா, நிவே தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுபாங்கி, பிரஜீத், அபிராம், அனுஷா, தஜீபன், கஸ்மிதா,அனித் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2009) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு, இருபாலை. தகவல்: குடும்பத்தினர்.

## மாரியம்மன் விழாவில் உண்ட உணவு விஷமானதால் 80 பேர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, ஜூன், 15

கொத்மலைப் பிரதேசத்தில் உணவு விஷமானதால் 80 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொத்மலை வெதமுல்ல பிரதேசத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய நிகழ்வொன்றில் நேற்றுமுன்தினம் வழங்கிய உணவே இவ்வாறு விஷமாகியுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர கூறினார். (சி)

## மந்துவில் சந்தைப்பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மந்துவில் சின்னச்சந்தைப்பகுதியில் மாலை வேளைகளில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்குப் பின்னர் இவ் வழியே செல்லும் பெண்கள் மாணவிகள் போன்றோரை தகாதவார்த்தைகளால் ஏசுவதாகவும், சிலரைத் தாக்கமுறபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞர்களின் அட்டகாச செயல்களை கட்டுப்படுத்த ஊர்ப் பிரமுகர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியடைந்ததாகவும் தெரிவித்தனர். (1-207)

## உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 15

தீவக கல்வி வலயத்தில் கடமை நிறைவேற்று உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு தீவகக்கல்வி வலயத்தைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, தரம் 2-I தகுதியுடைய ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரி உடற்கல்வி பாடத்தில் பட்டதாரியாகவோ அல்லது பயிற்றப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை தீவக கல்வி வலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்று இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-9)

## தமிழர் உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயாட்சியை அனுபவிக்க முடியும் எனத் தாங்கள் வலியுறுத்தினர் எனவும், இந்த விடயத்தில் இலங்கை அரசு நடந்து கொள்ளும் விதம் சந்தேகத்தையும் கேள்விகளையும் உருவாக்கியுள்ளது எனவும் இரா. சம்பந்தன் இந்தோ ஆசிய செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் புனர்வாழ்வு, மீள் குடியேற்ற நடவடிக்கைகளை முற்று முழுதாகப் பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் கைகளில் விட்டுவிட வேண்டாம் எனவும் அந்தப் பணிகளில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் அவசியம் எனவும் இந்திய அரசியல் தலைவர்களிடம் தாங்கள் வலியுறுத்தியதாக அவர் மேலும் சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை கொழும்பு குறைத்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கின் ஆட்சி முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் கரங்களில் உள்ளதாலும், வடக்கில் தமிழ் மக்களின் எதிர்ப்பு சக்திகள் நடமாடுகின்றமையாலும் தமது உறுப்பினர்கள் அச்சமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார் -என்றும் இந்தோ ஆசிய செய்திச் சேவை தெரிவித்தது. (அ)


## ஆள் தேவை

மில் அல்லது பலசரக்குக்கடையில் வேலை செய்ய விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு நேரில் வரவும்.

[illegible]

25, பலாலி றோட், திருநெல்வேலி


## மரண அறிவித்தல்கள்

### இராசையா விஜயராசா

பாலாவி தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், மல்வில், இயக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா விஜயராசா 13.06.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2009) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தற்போதைய முகவரி: பாலாவி தெற்கு, கொடிகாமம்.
தகவல்: குடும்பத்தினர்.

### அருணாசலம் கிருஸ்ணதாஸ்

தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் கிருஸ்ணதாஸ் 12.06.2009 அன்று காலமானார்.

அன்னார் நடராசா அரியமலரின் அன்புக் கணவரும் தம்பசிட்டியைச் சேர்ந்த அருணாசலம் - பொன்னம்மா தம்பதிகளின் மகனும் அனுஜா (ஆசிரியர், கண்டி), மேனகா (வவுனியா பல்கலைக்கழகம்), ஜனார்த்தனன் (லண்டன்), ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமுதா, சுந்தரி, இன்பம் (கனடா), ராதாகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிதம்பரப்பிள்ளை, அரியகணராசா, பாலேஸ்வரன், சரவணபவா (கொழும்பு), சரவணகுகா, சரவணஆனந்தன் (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2009) திங்கட்கிழமை மு.ப. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே: இல. 0772208207, 021 226 3070
தகவல்: குடும்பத்தினர். வல்வெட்டி.

### அன்ரனி பிரான்சிஸ் (தங்கப்பிரகாசம்) யேசுதாசன் ஜெரோம்



ஊர்காவற்றுறை, மண்கும்பி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி பிரான்சிஸ் யேசுதாசன் ஜெரோம் நேற்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்ரனி பிரான்சிஸ் (தங்கப்பிரகாசம்) - செபஸ்ரியம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் ஏலியறீற்றாவின் அன்புக் கணவரும் எல்சி ஜெரோசினி, யோசப்கிருசேந்திரா , அமலி கிருஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி விமலாபிறின்சிலி (மன்னார்), திருமதி கொலஸ்ரிக்கா மரியதாஸ் (நியூசிலாந்து), திருமதி யுகொறஸ்ரா தேவராஜா (இந்தியா), திருமதி மேரிகவிஸ்ரா செல்வநாயகம் (அதிபர், புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை), திருமதி கிளாறா யோச் (கொழும்பு), திருமதி மரிஸ்ரலா ராம்குமார் (கனடா), அருட்சகோதரி எவரெஸ்ரா (பள்ளிமுனை), திரு.றோய் அருள்நேசன் (கனடா), திரு.பொஸ்கோ (கனடா), திரு. சாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செல்வி அல்போன்சவின் (மணி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.06.2009) திங்கட்கிழமை 2மணிக்கு ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்பு ஊர்காவற்றுறை அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊர்காவற்றுறை மண்கும்பி வீதி, ஊர்காவற்றுறை.
தகவல்: குடும்பத்தினர் திருமதி கலிஸ்ரா (சகோதரி).

### ஏரம்பு குருமூர்த்தி



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சென்னை, இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய ஏரம்பு குருமூர்த்தி 12.06.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் தெய்வநாயகியின் அன்புக் கணவரும் அமரர் கதிரவேல் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பாரதிதாசன் (லீண்டன்), காந்திதாசன் (லண்டன்), அன்னாதாசன் (லண்டன்), கமலதாசன், செல்வதாசன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி, அனுசா, தட்சாயினி, யாழினி, திவ்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் பவிக்சன், அபிராம், திவ்யா, லக்சிகா, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, யோகம்மா, கண்மணி, பரிபூரணம், மகாலக்சுமி மற்றும் நாகேசு (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோன்மணி, ஐயாத்துரை, சற்குணம், இராமச்சந்திரன், தம்பையா, மாரிமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சொர்ணவடலிப் பிள்ளையார் கோயில் முன்பாக, கொக்குவில் மேற்கு.
தகவல்: குணரட்ணம் (மதி) (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்பால் மனிதாபிமானம் மறக்கப்பட்டு வருகிறதா?

குடாநாட்டில் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான ரயில் பாதைகள் மற்றும் ரயில் நிலையங்கள் அமைந்திருந்த காணிகளில் வசித்து வருவோரை இம்மாத இறுதிக்குள் வெளியேற்றுமாறு அரசாங்கத்தின் சார்பில் யாழ்ப்பாணம் அரச அதிபர் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்களுக்கு உத்தர விட்டுள்ளார்.

தெற்கிலிருந்து வடக்கே- யாழ்ப்பாணத்துக்கு - 19 வருடங்களின் பின்னர் ரயில் சேவையை விரைந்து மீண்டும் ஆரம்பித்துவிட வேண்டும்; அதனைத் தனக்குச் சார்பான பிரசாரப் பொருளாக்கி தமிழர்களின் மனங்களை வென்றுவிட வேண்டும் என்று அரசாங்கம் துடியாய்த் துடிக்கிறது புலப்படுகிறது.

வன்னியை விடுவிக்கப்பட்ட பிரதேசமாக்கியகையோடு, வடக்கில் அபிவிருத்தியை விரைந்து ஏற்படுத்தினால் வன்னியில் உயிர்நீத்த ஆயிரக்கணக்கான தமிழர்களின் இழப்புக் குறித்து ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் குடாநாட்டு மக்களின் துன்பத்தை, சோகத்தை குறைத்து விடலாம் என்று அரசாங்கம் கணக்குப் போட்டிருக்கின்றதா....? அல்லது வடக்கு அபிவிருத்தி என்ற மேலுறையுடன் வெளிநாடுகளிடம் இருந்து பெரும் நிதியுதவியைக் கறக்கலாம் என்ற திட்டமோ...? அதனால் வேக வேகமாக உட்கட்டுமானத்தை உயர்த்திக் காட்டுவதற்கு அரசு அவசரப்படுவதாகவே தோன்றுகிறது.

அந்த நோக்குடனான வீச்சில் கண்ணை மூடிக் கொண்டு அல்லது மண் விண் தெரியாமல் என்றும் கூறலாம், பல புதிய திட்டங்களை, வடக்கின் அபிவிருத் திக்கென வடக்கின் வசந்தம் என்ற எழுச்சிப் பெயரில் முன்னெடுக்கப்போவதாக அரசு பிரசாரம் செய்கின்றது.

வடக்கை அபிவிருத்தி செய்ய வேண்டாம் என்றோ, இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டாம் என்றோ அல்லது இப்பிரதேசத்தின் உட் கட்டுமானங்களை சீர்செய்யவேண்டாம் என்றோ இந்தப் பிரதேசத்தின் எந்தப் பிரஜையும் சொல்லமாட்டார்; வரவேற்காது இருக்கவும் மாட்டார்.

ஆனால் தற்போதைய தள நிலைமைகளை, கருத்தில் கொள்ளாது தமிழர்களின் மனங்களை வெல்கிறோம் அல்லது வெல்வோம் என்று வெளியுலகத்துக்கு காட்டிக்கொள்வதற்காக மக்களுக்கு இடைஞ்சல் தரும் அலுவல்களை ஆற்றுவது எந்த வகையிலும் பொருத்தமாகாது; ஏற்புடையதும் அல்ல.

குடாநாட்டுக்கு ரயில் சேவை தேவைதான். அதற்கான பணிகள் நடைபெறத்தான் வேண்டும். அதனைச் செய்வதில் அளவுக்கு விஞ்சிய அவசரம் தேவைதானா? அதுவும், ஏற்கனவே அரசாங்கம் குடாநாட்டில் எண்பதுகளிலும் அதன் பின்னரும் நடத்திய போரின் காரணமாக, தமிழர்கள் பூர்வீக காலம் தொட்டு வாழ்ந்துவந்த வலிகாமம் வடக்குப் பிரதேசத்தை அரசு இராணுவ வலயம் ஆக்கியதால் அங்கிருந்து வெளியேற றப்பட்டு இடம்பெயர்ந்து வந்து ரயில் பாதைகளிலும் ரயில் நிலையங்களிலும் குடியமர்ந்த மக்களை ஆகக் குறைந்தது மூன்றுமாத கால முன்னறிவித்தல் தானும் இல்லாமல் வெளியேற்றி மீண்டும் அவர்களை அகதிகளாக்கி அவதிப்பட வைக்க வேண்டுமா?

அரசாங்கம் என்பது மக்கள் நலன் நாடியே செயற்பட வேண்டும். ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களை சொந்த மண்ணிலேயே துன்பப்படுத்தி ஏதிலிகளாக்கும் கருமங்களிலேயே கொழும்பு அரசாங்கங்கள் கடந்த பல தசாப்தங்களாக இன்பம் கண்டு வருகின்றன- பாதுகாப்பு என்ற கேடயத்துடன்!

ஓமந்தையில் ரயில் நிலையம் கட்டுவதற்காகக் கடந்த வாரம்தான் அத்திவாரக்கல் நடப்பட்டிருக்கின்றது. அதனைப் பூர்த்திசெய்து யாழ்ப்பாணத்துக்கு ரயில்பாதை இடவும், இடையில் ரயில் நிலையங்களை நிர்மாணிக்கவும் ஆகக் குறைந்தது ஒரு வருடம் தேவைப்படாதா?

அந்தக் காலப் பகுதிக்குள் இப்போது குடாநாட்டில் ரயில் நிலையக் காணிகளில் குடியிருப்போருக்கு அவர்கள் வேறு இடங்களில் வசிப்பதற்கான வசதிகளை அரசு செய்து கொடுக்க முடியாதா? அத்தகைய ஒரு ஏற்பாட்டுக்கு முன்னர் வெளியேற வேண்டும் என்றால் 275 குடும்பங்களைச் சேர்ந்த முன்னைய அகதிகள் மீண்டும் அகதிகளாக்கப்படவேண்டுமா?

தமிழ் மக்களை அகதிகளாக்கி வேடிக்கை பார்க்க வேண்டும் என்பதில் கொழும்பு அரசுகளுக்கு இப்படி அடிக்கடி- அவ்வப்போது- அலாதி விருப்பம் உண்டாவதற்குக் காரணம் என்ன? அவர்கள் இரண்டாம்தரப் பிரஜைகள் தானே; பாதுகாப்பு என்ற முத்திரை குத்தி அவர்களை எதுவும் செய்யலாம்; தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லை என்பதாலா? இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்தவர் போன்று தமிழர்களும் சம பிரஜைகள், அதாவது உரிமைகள் உள்ள பிரஜைகள் என்ற நிலைக்கு வருவதற்கு அவர்களுக்கு வலுவில்லை என்று கருதுவதாலா? தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள்பால் மனிதநேயம் அவர்கள் மீது மனிதாபிமானம் காட்டுவது என்பதெல்லாம் வசதியாக மறக்கப்பட்டு வருகின்றது என்பதாலா? இந்த நிலை எப்போது மாறும்?

# புலிகளை ஆதரித்தவர்கள் தொடர்பான அரசின் கொள்கை மாற்றப்பட்டு விட்டதா?

**14.06.2009 அன்று சுலாண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியுள்ள அரசியல் விமரிசனத்தில் இருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன**

கடந்த வாரம் வியாழக்கிழமை விடியற்காலை கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேட்கெயித் பொப்ரே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அவர் றொறண்டோ மத்திய தொகுதியின் லிபரல் கட்சி உறுப்பினராக கனேடிய மக்கள் சபையில் அங்கம் வகிக்கின்றார். கனடாவிலுள்ள இலங்கை ஸ்தானிகரகத்தில் விசாவொன்றைப் பெற்றுக் கொண்டு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவர் இலங்கை வந்திருந்தார். ஏற்கனவே இந்தியாவில் இவ்வாறான பயணம் ஒன்றை முடித்துக் கொண்டே அவர் இலங்கை வந்திருந்தார்.

விமான நிலையத்தில் இருந்து குடிவரவு அதிகாரிகள் அவரை நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது என்று அறிவித்தார்கள். குடிவரவுத்துறை கட்டுப்பாட்டாளரால் நாட்டுக்குள் ரே அனுமதிக்கப்படலாகாதென அறிவிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறினார்கள். அவரை நாட்டுக்குள் அனுமதிப் பதற்கான முயற்சிகள் யாவும் தோல்வி கண்டதையடுத்து அன்று மாலை றொறண்டோ செல்வதற்காக லண்டன் புறப்பட்ட விமானம் ஒன்றில் ரே பிரயா ணத்தை மேற்கொண்டார்.

லண்டனில் வைத்து ஊடகங்களுக்கு தெரிவித்த செய்தியில் எனக்கு இறுதியாக ஒரு தகவல் கிடைத்தது. தவறான தகவல்களை வைத்து நான் அறிக்கைகளை வெளியிட்டேன் என்ற வகையில் நான் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும் என்று கூறி கையெழுத்திடுவதற்கென எதையோ தந்தார்கள். அப்படியென்றால் எனது பயணம் தொடர்பாக மீள் பரிசீலனை செய்யப்படும் என்றார்கள். நான் முற்றாக மறுத் துவிட்டேன் என்று தெரிவித்திருந்தார். எந்தஓர் அறிக்கையிலும் கையெழுத்திடமுடியாது என மறுத்து விட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

பொப்ரே யின் 12மணிநேர கொழும்பு விமான நிலைய நாடகம் இப்போது கொழும்புக்கும் கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர சிக்கல் ஒன்றை உருவாக்கியுள்ளது. மூன்று வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள கனேடியத் தூதரகத்துக்கு முன்னால் கும்பல்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பான சிக்கல் ஒருவாறு முடிவுற்றுள்ள நிலையில், இப்போது பொப்ரே தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. அன்று கனேடிய தூதரகத்தின் பாதுகாப்பு கமராக்களில் வண்ணம் பூசியும் சுவர்களில் ''எல்.ரி.ரி.ஈ தூதரகம் என்று எழுதியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அசிங்கமாக நடந்துகொண்டிருந்தார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கவலை தெரிவித்திருந்தது. வெளியுறவு அமைச்சு கடும் தொனியில் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை விட்டதுடன் பொலிஸ் விசாரணை நடைபெறும் என்றும் அறிவித்திருந்தது.

பொப்ரேயின் பயணம் தடை செய்யப்பட்ட விடயம் குடிவரவுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் பி.பி. அபேகூன் வானொலி செய்திகளில் அதுபற்றி விடுத்த அறிவித்தல்களையடுத்தே அதிகாரபூர்வமாக கவனத்திற்கு வந்தது.

''அவர் நாட்டிற்குள் நுழைவது தடைசெய்யப்பட்டுள்ளது, அவர் நாடு கடத்தப்படுகிறார். தமிழீழ விடுதலைப்புலிகளை அவர் ஆதரிப்பவர் என்பது குறித்து எமக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன'' என்று அவர் கூறியிருந்தார்.

றொறொன்ரோவிற்கு திரும்பிய தன் பின்னரே கனடாவிலுள்ள ஊடகங்களுக்கு இணையத்தளம் மூலம் தமது நிலைப்பாட்டை ரே வெளியிட்டிருந் தார்.

என்னை 'எல்.ரி.ரி.ஈ' ஆதரவாளன் என்று ஓர் இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டிருப்பதுபோல் வர்ணிப்பது என்றால் அது ஒரு வெறும் அபத்தமான பொய் என்றுதான் கூறவேண்டும். என்னைப்பற்றி அவதூறான மற்றும் மோசமான திட்டமிட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் முன்னரே வந்திருந்துள்ளது என்பது புரிகின்றது. 30 ஆண்டுகால பொதுப் பணியில் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்துள்ள எனது அனுபவத்தில் நான் கூறுவதென்னவென்றால் இந்தத் தீர்மானம் அவர்கள் மீதுதான் பிரதிபலிக்குமேயன்றி என்மீது அல்ல. வன்முறைகளையும் தீவிர வாதத்தையும்

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரை திருப்பி அனுப்பியதால் எழுந்துள்ள கேள்வி

எதிர்த்து என் வாழ்நாள் முழுவதும் போராடியிருக்கிறேன். அது அனைவரும் அறிந்த விடயம் என்று ரே தெரிவித்திருக்கிறார்.

இன்னும் ஒன்று தெரிந்திருக்கக் கூடியது என்னவென்றால் பேச்சு வார்த்தைகள், விவாதங்கள் குறித்து இலங்கை அரசு பயந்து போயுள்ளது. செயல்படுவதில் அச்சம் கொண்டுள்ளது. இது அவர்கள் தரப்பில் வெட்கக் கேடானது. என்னையே இவ்வாறு தான் நடத்துவார்களானால் பேசமுடியாதவர்களை, பொது அறிக்கைகள் விடமுடியாதவர்களை எவ்வாறு நடத்துவார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையிலுள்ள கனேடிய தூதரக அலுவலர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் ''ரே செல்லுபடியாகும் விசாவைப் பெற்றிருந்தார், அவர் 'எல்.ரி.ரி.ஈ' ஆதரவாளர் என்று நிராகரித்திருந்தமை அபத்தமான காரியம்'' என்று கூறினார்.

குடிவரவு திணைக்கள கட்டுப்பாட்டாளர் அபேசிங்க, ரேயின் அனுமதி மறுக்கப்பட்டதற்கு புலிகளின் ஆதரவாளர் என்பதே காரணம் என்று கூறியிருந்தார். இதன் மூலம் விமானநிலைய அதிகாரியின் செயலை சரியென்று தற்காத்திருக்கிறார். அதன் மூலம் சரியாகவோ தவறாகவோ அதிகாரபூர்வ நிலைப்பாடு ஒன்றையும் உருவாக்கியுள்ளார். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் நாட்டின் வெளிநாட்டுக்கொள்கையை செயற்படுத்தும் அதிகாரம் கொண்டிருக்கும் வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சு வாய்திறவாமல் மௌனமாக இருந்துள்ளது.

வெளியுறவு அமைச்சு அறிக்கை எதுவும் வெளியிடாமைக்கு முக்கிய காரணம் என்னவென்றால் வெளிநாட்டமைச்சின் சம்மதத்துடன் தான் ஒட்டாவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் ரேக்கு விசா வழங்கியிருந்தது. அதாவது இப்போது புலிகளின் ஆதரவாளர் என்று வர்ணிக்கப்படும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தனிப்பட்ட முறையில் இலங்கைக்கு வர அனுமதித்து விட்டு குடிவரவுக் கட்டுப்பாட்டாளரைக் கொண்டு அவர் புலிகளின் ஆதரவாளர் என்பதால் தடைசெய்துள்ளோம் எனச் சொல்ல வைத்துள்ளது. இந்த நிலைப்பாட்டின் மூலம் புலிகளின் ஆதரவாளர் எவரும் நாட்டுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது தெளிவாகின்றது.

இது இலங்கை அரசின் ஒரு புதிய கொள்கை நிலைப்பாடுதானா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இம்முரண்பாடுகள் இவ்வாறே இருக்கதக்கதாக, புலிகளின் பிரிவினை வாதப்போராட்டத்தின் போது அவர்களைப் பல்வேறு வகைகளில் ஆதரித்தவர்களை எல்லாம் அரசாங்கம் வென்றெடுப்பதற்கு இப்போது முயன்று வருகிறது. இந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதியை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி அண்மையில் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். புலிகள் விடயத்தில் கலைஞர் கருணாநிதியின் நிலைப்பாடு தெரிந்த விடயம். இலங்கையில் உள்ள நிலைமைகளைக் கண்டறிய தமிழ் நாட்டிலிருந்து சகல கட்சி உறுப்பினர் குழு ஒன்றை வருமாறு ஜனாதிபதி கோரியிருக்கிறார். இப்போது எழும்கேள்வி என்ன வென்றால் ரே மாத்திரம் ஏன் அனுமதிக்கப் படவில்லை என்பதே.

புலிகளின் ஆதரவாளர்கள் எவரும் நாட்டுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென்றால் வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதரங்களுக்கு வழிகாட்டல் நடைமுறைகள் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லை எனில் வெளிநாட்டு உறவுகளைக் கொண்டு நடத்துவதில் சிக்கல் இருக்கவே செய்யும்.

கனேடிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி ஊறுப்பினர் ஒருவர் நாட்டுக்குள் வருவதைத் தடுத்தது மட்டுமல்ல கனேடிய அரசு மற்றும் எதிர்க்கட்சியினரை இலங்கை அரசுக்கு எதிராக வரிந்து கட்டுவதற்கு இந்தச் சம்பவம் வழி வகுத்துள்ளது. அது மட்டுமல்ல கனடாவில் உள்ள ஊடகங்கள் எல்லாமே ரேயின் நாடு கடத்தலை ஒன்று சேர்ந்து கண்டிக்கத் தொடங்கியுள்ளன.

ரேயின் நாடுகடத்தல் தொடர்பாக கனடா அரசு அதிருப்தியையும் மகிழ்ச்சி இன்மையையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது. ரேயின் வருகை இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதும் அவர் புலிகளின் ஆதரவாளர் என்பதும் அபத்தமாகும் என்று கனேடிய வெளியுறவு த்துறை பேச்சாளர் எம்மா வெல்ட்போர்ட் கூறினார்.

கனடாவில் உள்ள ஊடகங்களின் எண்ணம் 'குளோப் அண்ட் மெயில்' ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு வெளியிட்டுள்ளது.

கனேடிய எதிர்க்கட்சி வெளியுறவு விமர்சகர் மொப்ரே இலங்கை அரசினால் நாடுகடத்தத்தப்பட்டிருப்பது வன்முறைகளை நாட்டில் இருந்து வெளியேற்றுவதற்கு எந்த ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் போராடி வந்துள்ள கௌரவமிக்க அந்தப் பிரமுகருக்கு தனிப்பட்ட முறையிலான அகௌரவமாகும். அதேபோல் கனடாவுக்கும் மானக்கேடு. இலங்கையின் அமைதி முயற்சிகளில் ஆதரவுகாட்டி பாடுபட்ட கொமன்வெல்த்தின் நட்பு நாடாகும் கனடா - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 02 | 16.06.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.ப. 11.47வரை |
| நட்சத்திரம்: | உத்தரட்டாதி |
| | பி.இ.05.25 வரை |
| சுபநேரம்: | 10.23 - 11.53 |
| ராகுகாலம்: | 02.53 - 04.23 |

## 20 ஆயிரம் மாணவர் பல்கலைகளுக்கு இம்முறை அனுமதி

கொழும்பு, ஜூன் 15

கடந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை எழுதிய சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் இந்த வருடம் பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்பட விருக்கின்றார்கள். அதிக மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீடு செய்வது குறித்து தாங்கள் ஆராய்ந்து வருவதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதியில் காலதாமதம் ஏற்படக்கூடிய நிலைமைகள் இருப்பதாகக் கூறிய ஆணைக் குழு கேள்விப்பத்திரத்தினை மீள் திருத்தப் பணிகளுக்குப் பின் விடைத் தாள்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விளையாட்டுப்போட்டி நேற்றுமுன்தினமும் நேற்றும் மல்லாகம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மாணவர்களின் உடற்பயிற்சி போட்டியையும் இம்முறையும் இரண்டாவது தடவையாக முதலாம் இடத்தைப்பெற்ற வாழ்வகத்துக்கு வெற்றிக் கிண்ணத்தை வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் பா.விக்கினேஸ்வரன் வழங்குதையும் வாழ்வகத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# நெல்லியடிம.வி., சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கிய நலன்புரி நிலையங்கள் நேற்று மூடப்பட்டன

கரவெட்டி, ஜூன் 15

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்காக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்கள் நேற்று மூடப்பட்டன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 1500 பேரும்-

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கியிருந்த 1200 பேரும்- நேற்று வாகனங்கள் மூலம் கொடிகாமத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.நேற்றுக் காலை முதல் மாலை 6 மணி வரை இந்தப் பணி இடம்பெற்றது.

போக்குவரத்துச் சபை பஸ்கள், லொறிகள் மூலம் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது பாதுகாப்புப்படையினருடன் பிரதேச செயலர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.பாடசாலைகளில் இருந்த பொதுமக்கள் வெளியேற்றப்பட்டதை அடுத்து அந்தப் பாடசாலைகளை இயக்குவதற்கு பாடசாலைகளின் அதிபர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தவர்களை செயலகத் திட்டப்பணிப்பாளர் எம்.பிரதீபனும்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தவர்களை பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சனும்- கொடிகாமம் முகாமுக்கு அழைத்துச் செல் லும் பணிகளை முன்னெடுத்தனர்.பிரஸ்தாப இருபாடசாலைகளிலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாண வர்களுக்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நன்றி தெரிவித்துள்ளார். (1-70-207)

# தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்க வேண்டிய கட்டாயத்தில் இலங்கை ஜனாதிபதி இருக்கிறார்

## *அகாஷி நடத்திய பேச்சுக்களை அடுத்து ஜப்பானிய அரசின் நிலைப்பாடு*

புதுடில்லி, ஜூன் 15

விடுதலைப் புலிகளை ஒழித்து விட்ட நிலையில் சிறுபான்மை மக்களுடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கையின் நட்பு நாடுகளில் ஒன்றான ஜப்பான் இந்தக்கருத் தைக் கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

ஜப்பானின் விசேடதூதுவர் யசூஷி அகாசி அண்மையில் இலங்கை ஜனாதிபதியுடன் நீண்ட பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தார்.

யசூசி அகாசியுடன் காலை உணவருந்திய இலங்கை ஜனாதிபதி அவருடனான பேச்சுக்களின் போது புலிகளைத் தோற்கடித்து விட்ட கையோடு நீண்டகால தமிழர் பிரச்சினை தன்னிச்சையாகவே தீர்ந்து விடும் என்று நான் எண்ணவில்லை என்று கூறியுள்ளார்.

ராஜபக்ஷ - அகாசி பேச்சுக்களின் போது இலங்கையில் தமிழர்களும், முஸ்லிம்களும் சிறப்பான பிரதிநிதித்துவம் பெறும் வகையில் மேல் சபை ஒன்றை உருவாக்குவது தொடர்பான கருத்து வெளிப்பட்டதாக விஷயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### தமிழர்களுக்கு சலுகை அளிப்பதை எதிர்க்கும் சக்திகள்

90 வீதமான சிங்களவர்கள் தம்மை ஆதரித்தாலும் தமிழர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுவதை எதிர்க்கும் பலம் வாய்ந்த சக்திகள் சிங்களவர் மத்தியில் இருப்பதாக ராஜபக்ஷ அகாசியிடம் தெரிவித்ததாகத் தெரிகின்றது.

அரசமைப்பு மாற்றங்களைக் செய்வதாயின் 225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மை தமக்குத் தேவைப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். அரசியல் தீர்வுக்கு அவசரப்பட்டால் இடறி விழ நேரிடும் என்று அவர் கருதுகின்றார்.

இதன் காரணமாகவே ஜனாதிபதி மற்றும் பொதுதேர்தல்களை நடத்துவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற தமிழர் வாழும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்த விரும்புகிறார். சில மேற்கு நாடுகளைப் போல் அன்றி ஜப்பான் ஒரு போதும் தமிழ்ப் புலிகளுக்கு அனுதாபம் காட்டியது கிடையாது. இந்த நிலைப்பாடு தென்னிலங்கையால் பெரிதும் வரவேற்கப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய போர் தொடர்பாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை எதிர் கொள்ளவதற்கு இலங்கை முரட்டுத்தனமாகப் பின்வாங்குவது குறித்து ஜப்பான் திருப்தி அடைய வில்லை.

அண்மையில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தின் போது இலங்கையை ஆதரித்து 29 நாடுகள் நின்ற போதிலும் ஜப்பான் மேற்கு நாடுகளுடன் ஒத்துபோகாவிட்டாலூம் வாக்களிப் பிலிருந்து ஒதுங்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

# குடாநாட்டிலிருந்து ஏ-9 பாதை ஊடாக புகையிலை எடுத்துச்செல்ல அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

குடாநாட்டிலிருந்து ஏ-9 பாதையூடாக கொழும்புக்கு அனுப்புவதற்காக இரு லொறிகளில் நாவற்குழிக்கு ஏற்றிச் செல்லப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு திருப்பி அனுப்பப்பட்டன.

பாதுகாப்புப் படையினரின் செயற்பாடு குறித்துக் கவலை தெரிவித்துள்ள யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மளனங்களின் சாமாசத் தலைவர் இது குறித்து அரசாங்க அதிபர், சமூக சேவைகள் அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன் புகையிலை உற்பத்தியாளர்களின் நன்மை கருதி புகையிலையைத் தொடர்ந்து அனுப்புவதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பெருந்தொகையிலான புகையிலை சுருட்டுத் தொழிற்சாலைகள் இயங்காததினாலும் சுருட்டு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மந்த நிலையினாலும் விவசாயிகளின் வீடுகளில் விற்பனையின்றித் தேங்கிக் கிடக்கிறது.

இதனால் புகையிலையின் தரம் குறைந்துள்ளதுடன் பணப் புழக்கமும் முடங்கியுள்ளது.

விவசாயிகளினதும் வியாபாரிகளினதும் நிலைப்பாடு குறித்து யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து வெங்காயத்துடன் சேர்த்து புகையிலையையும் தரைப் பாதை ஊடாக கொழும்புக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் சமாசத் தலைவர் க.முதலியார் மேற்கொண்டிருந்தார்.

கொழும்பில் இருந்து பொருள்களுடன் வரும் லொறிகளில் நாவற்குளியில் வைத்து வெங்காயத்துடன் புகையிலையையும் ஏற்றி அனுப்புவதற்காக இரு லொறிகளில் யாழ்ப்பாணத்தில் இருந்து நாவற்குளிக்கு புகையிலை எடுத்துச்செல்லப்பட்டது.

அங்கு நின்ற லொறிகளில் வெங்காயத்தை ஏற்றுவதற்கு அனுமதித்த பாதுகாப்புப் படையினர் புகையிலையை ஏற்றுவதற்கு அனுமதிக்கவில்லை. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டுப் புகையிலையை அனுப்ப பாதுகாப்புப் படையினர் மறுத்ததினால் இரு லொறிகளும் யாழ்ப்பாணத்துக்கு திரும்பிச்சென்றன.

இது குறித்து சாமாசத் தலைவர் அரசாங்க அதிபர், சமூக சேவைகள் அமைச்சர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியதுடன் புகையிலையை அனுப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி கேட்டுள்ளார். (1-152)

# இராமாவில் முகாமில் மேலும் ஒரு கிளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு மேலும் 2 ஆயிரம் பேர் நேற்று வந்து சேர்ந்துள்ளதையடுத்து தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் மேலும் ஒருகிளையை இன்று திறக்கவிருக்கிறது.

ஏற்கனவே இச்சங்கத்தின் மூன்று கிளை அங்கு இயக்குகின்றன. (1-207)

# சிறுபிள்ளைகளின் விளையாட்டு; வீட்டுக்கூரை ஒன்று எரிந்தது

சங்கானை, ஜூன் 15

சிறு பிள்ளைகள் குப்பைக்கு நெருப்பு மூட்டியதால் நெருப்பு அருகில் உள்ள வைக்கற்போர் மற்றும் விறகில் தீப்பற்றி வீடு எரிந்த சம்பவம் ஒன்று சங்கானையில் நிகழ்ந்துள்ளது.

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் வீடே நேற்று பி.ப.3 மணியளவில் இவ்வாறு எரிந்து சேதமாகியுள்ளது.

அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டாலும் வீட்டின் கூரைப் பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. (1-29)

# தபால் மூல வாக்களிப்பு; விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பிக்கும் இறுதித் திகதி எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான இறுதித் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது. எனினும் பலரின் கோரிக்கையை ஏற்று இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (1)

# நெல்லியடி ம.வி. மீண்டும் வெள்ளிமுதல் பழைய இடத்தில்

கரவெட்டி, ஜூன் 15

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீளவும் வித்தியாலயத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன.

வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டதன் காரணமாக பாடசாலை தற்காலிகமாக வேறு இடத்தில் இயங்கியது. தற்சமயம் நலன்புரி நிலையம் மூடப்பட்டதால், பாடசாலைகளில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் வெள்ளிக்கிழமை முதல் இயங்கும்.

தரம் 13 மாணவர்களுக்கு தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நாளை மறுதினம் புதன்கிழமை நடத்தும் பரீட்சை வித்தியாலயத்திலேயே இடம்பெறும். இப்படி அதிபர் தெரிவித்தார். (1-70)

# 10 ஆயிரம் பனம் விதைகள் நடத்திட்டம்

கோப்பாய், ஜூன் 15

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பனை அபிவிருத்திச் சபையினால் 10 ஆயிரம் பனம் விதைகள் நடப்படவுள்ளன.

விரைவில் நடும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-72)

# மரண அறிவித்தல்

## *கதிரன் சண்முகம்*

நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரன் சண்முகம் நேற்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - கதிராசி தம்பதிகளின் அன்பு மகனும்காலஞ்சென்றவர்களான கணபதி - ஐயாத்தை தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புவனேந்திரன் மற்றும் சிவனேந்திரன் (சுவிஸ்), மதனலோஜினி (சுவிஸ்), புஸ்பலோஜினி (நயினாதீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார் (சுவிஸ்), சசிகலா (சுவிஸ்), ஜசிந்தன் (நயினாதீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்யி (சுவிஸ்), சஜீனா (நயினாதீவு) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2009) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருச்சொரூபப் பவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது. புனித அந்தோனியார் தேரில் பவனி வந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: நந்தன்)

# நலன்புரி நிலையங்கள் அமைந்திருந்த பாடசாலைகளை புனரமைப்பதற்கு மாணவரிடம் நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்த பாடசாலைகளை புனரமைப்பு செய்வதற்கு மாணவர்களிடமிருந்து தலா 600 ரூபா அறவிடப்படுகிறது.

இதனால் பெற்றோர் பெரிதும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தென்மராட்சி பிரதேசத்தில் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்த பாடசாலைகளிலேயே இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்கள் மூடப்பட்ட பின்னர் சுகாதார, சுத்திகரிப்புப்பணிகள் அனைத்தும் சுகாதாரப் பகுதியினரும், உள்ளூராட்சி சபையினரும் மேற்கொண்டதாகவும் மைதானத்திற்கு மணல் போடுவதற்கும் கட்டடங்களுக்கு வர்ணம் தீட்டுவதற்குமென மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களுக்கான முழுப் பொறுப்பும் யாழ். செயலகத்ன்வசம் உள்ளது.

இந்நிலையில் பாடசாலைக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு யாழ். செயலகத்திடமே உரிய நிதியைப் பெற்றிருக்க வேண்டும்.

அதனை விடுத்து மாணவர்களிடம் அதனை அறவிடுவது தவறு என்று பெற்றோர் விசனமடைகின்றனர்.

மாணவர்கள் அனைவரும் வசதியான குடும்பத்தவர்களைச் சேர்ந்தவர்கள் என பாடசாலை நிர்வாகங்கள் தீர்மானிப்பது கவலைக்குரிய விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203)

## சுகாதாரத் திணைக்களத்திற்கு கப்பல் மூலம் மருந்துகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட இந்த மருந்துகளை குடாநாட்டில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இந்த வாரத்தில் இருந்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வைத்தியசாலைகளிலும் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த மருந்துத் தட்டுப்பாட்டால் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களில் அதிக பணம் கொடுத்து மருந்துகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-224)

## நன்னடத்தைப் பாடசாலை திறக்கப்பட்டது

நாவற்குழி, ஜூன் 15

சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைத்திணைக்களத்தினால் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்ட சான்றுபெற்ற நன்னடத்தைப் பாடசாலையின் திறப்பு விழா அண்மையில் பாடசாலையின் அதிபர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாண உதவிப் பணிப்பாளர் கே.பழனிமலைநாதன் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் க. சிவகரன், சமூக சேவைத் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ஆ. ஞானவேல் ஆகியோரும் கலந்துகொண்டனர். (203- 288)

## விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் , ஜூன் 15

இலங்கை விவசாயக்கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2010/ 2012 ஆம் ஆண்டுகளுக்கு விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் ஜி .சீ .ஈ சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருப்பதோடு ஆகக் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திக்க வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் 'பணிப்பாளர், விரிவாக்க பயிற்சிப் பிரிவு, விவசாயத்திணைக்களம், பேராதனை, என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் யாழ்.விண்ணப்பதாரர்கள் மேலதிக விவரங்களைப் பெறவிரும்பின் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம், பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரியுடனோ அல்லது 021 222 2175 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-204)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## குடும்பப் பாடசாலைகளில் மாணவர் பயிலமர்வுகள்

நல்லூர் , ஜூன் 15

யாழ். கல்வி வலய தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் பொருட்டு சுற்றாடல்செயற்பாடுகள் பாடத்திலுள்ள பரிசோதனைகள் செயற்பாடுகளுக்கான மாணவர் பயிலமர்வுகள் குடும்பப் பாடசாலை ரீதியாக நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிலமர்வுகள் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கிணங்க ஆரம்பக் கல்விப் பிரிவால் நடத்தப்படுகின்றன.

வார இறுதி நாள்களில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஆசிரியர்களின் வழிகாட்டல்களுடன் பயிற்சிகள் வழங்கப்படுவதாக கல்வி அபிவிருத்திப் பிரிவின் ஆரம்பக்கல்வி உதவிப்பணிப்பாளர் பூ. குகராசா தெரிவித்துள்ளார் (201- 111)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இந்துமக்கள் வழிபாடுகளை மேற்கொள்ள உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்

நல்லூர், ஜூன் 15

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இந்துக்கள் தமது மதரீதியான வழிபாடுகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்று இந்து அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நல்லை ஆதீனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்து அமைப்புக்களின் ஒன்றியக்கூட்டத்தின் போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இந்துக்கள் தமது மத ரீதியான வழிபாடுகளை மேற்கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளனர். நாங்கள் மேற்படி நிலையங்களுக்குச் செல்லும் போதெல்லாம் விபூதி தருமாறு கோரிக்கை வைக்கின்றார்கள்.

மக்களின் மன அமைதிக்கான பிரார்த்தனைகளை முன்னெடுக்கக் கூடியதான செயற்பாடுகள் தேவை-

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைஊடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் குறித்தும் ஆலோசனை தரப்பட வேண்டும். உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும் -என்றும் மேலும் கூறினார். யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமையிலான குழு இதுவிடயம் குறித்த ஆலோசனைகளை இந்து அமைப்புக்களின் ஒன்றியத்திடம் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப் பட்டது.

நலன்புரி நிலையங்களில் உள்ள ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிப்பது தொடர்பாக கொழும்பு இந்துமாமன்றம், துர்க்கை அம்மன் தேவஸ்தானம் ஆகியவை வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு முடிந்த உதவிகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இங்கு உள்ள மக்களுடன் இது குறித்து தொடர்புகொண்டு அவர்களது உதவிகளும் கோரப்படவுள்ளன என்று இக் கூட்டத்தில் மேலும் கூறப்பட்டது. (203-111)

## பயிற்சிப் பட்டறை

கரவெட்டி, ஜூன் 15

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கழிவு காகிதாதிகள் கூழிலிருந்து உருவங்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கி.சிறீபாஸ்கரன் தலைமையில் கரணவாய் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (204-70)

## சாவகச்சேரி நலன்புரி நிலையத்தில் இருந்த 27 முதியோர் உறவினர்களுடன்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 60 வயதுக்கு மேற்பட்ட 27பேர் அவர்களின் உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.


இந்த நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 442 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 318 பேரும் எதிர்வரும் 20ஆம் திகதி கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி ஜூலை முதல் வாரத்தில் சொந்த இடத்தில் இயங்குமெனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203- 207)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு இயந்திரம்

கரவெட்டி, ஜூன் 15

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்



தியசாலைக்கு 65 லட்சம் ரூபா பெறுமதியான 'எக்ஸ் ரே' கதிர் படப்பிடிப்பு இயந்திரங்களை ஐ.சீ.எம் நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த இயந்திரங்களை வைத்தியசாலையின் 'எக்ஸ் ரே' கதிர் படப்படிப்பு அறையில் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பணிகள்நிறைவடைந்ததும் நோயாளர்களுக்கான சேவை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை காலமும் 'எக்ஸரே' எடுப்பதற்கு நோயாளர் பெரும் சிரமம் அடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (203-70)

## கண்காட்சி

கரவெட்டி, ஜூன் 15

வல்வை சிதம்பராக் கல்லூரி மாணவர்களின் மாபெரும் பல்துறைக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 தொடக்கம் மாலை 4மணி வரை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சி. மகேந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவிற்கு பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் சி. தங்கராசா கலந்துகொள்வார். (203 - 100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

ஆனைக்கோட்டை, ஜூன்15

அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற் சங்கமும், வடக்கு, கிழக்கு மாகாணக் கிளையும் மேற் கொண்ட நடவடிக்கையின் பயனாக வருமான மேற்பார் வையாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது என்று இச்சங்கத் தலைவரும் இணைப்பாளருமான செ. சந்திரகுமார் தெரிவித்தார்.

22.12.2006 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வருமான மேற்பார்வையாளர் சேவைப் பிர மாணக் குறிப்பின் பிரகாரம் 8 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வகுப்பு II இற்கும் 10 வரு டங்களுக்கு மேல் வகுப்பு I இற்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

8 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்யாதவர் களுக்கு வகுப்பு III எனக் குறிப்பிட்டு நியமனக் கடி தம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதா கவும் அவர் குறிப்பிட்டார்.

சேவைப் பிரமாணக் குறிப்பு வருவதற்கு முன் நியமனம் பெற்ற அனைவருக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சினூடாக கடிதங்களைப் பெற்றுத்தரச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

22.12.2006 இற்கும் 31.12.2006 இற்கும் இடையில் சபையினால் நியமனம் பெற்ற வருமான மேற்பார்வையாளர்கள் தங்களது விவரத்தை உடனடியாகத் தெரி யப்படுத்துமிடத்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரி வித்தார். (203-20)


## தொழில் பயிற்சிநெறிகள்

அறவழிப் போராட்டக்குழ ஆடி மாதம் முதல் பின்வரும் பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

1. கையடக்கத் தொலைபேசி திருத்துதல் (3 மாதம்)
2. தையல் இயந்திரம் திருத்துதல் (3 மாதம்)
3. வீட்டு மின் உபகரணம் திருத்துதல் (3 மாதம்)
4. புத்தகம் கட்டுதல் (3 மாதம்)
5. மீள் முறுக்குதல் (றிவயிண்டிங்) (3 மாதம்)

ஆகிய பயிற்சி நெறிகளைப் பயில விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 25.06.2009ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் அறவழிப் போராட்டக்குழு, கைதடி நுணாவில், சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

செயலாளர்,
அறவழிப் போராட்டக்குழு
NVDAG

(TVEC பதிவுள்ளது). (86194)


## 'இ' அட்டையுள்ளோர் விவரங்கள் பதிவு

நல்லூர், ஜூன் 15

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் அரி யாலை கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறை, சுன் னாகம் உட்பட பல்வேறு பகுதிகளில் தங் கியுள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற் கான முன்னோடி நடவடிக்கையாக 'இ' அட்டை வைத்திருக்கும் குடும்பங்களின் பெயர் மற்றும் விவரங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டன.

இதன்படி கிராம அலுவலர் பிரிவுகளான ஜே/ 89 இல் 219 குடும்பத்தினரும், ஜே/ 90 இல் 194 குடும்பத்தினரும், ஜே/ 94 இல் 18குடும்பத்தினரும் ,ஜே/96 இல் 8 குடும் பத்தினருமாக 439 குடும்பத்தினர் தமது பதிவுகளைமேற் கொண்டுள்ளனர். (203 - 111)

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் 2009

யாழ்ப்பாண மாநகர சபை, வவுனியா நகர சபை வாக்கெடுப்பு வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை நிருபிப்பதன் தேவைப்பாடு தொடர்பாக வாக்காளர்களுக்கு விடுக்கப்படுகின்ற

### முக்கிய அறிவித்தல்

01. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் சிறப்பேற்பாடுகள் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கிணங்க வேறேதேனும் சட்டமொன்றில் முரண் பாடான முறையில் எத்தகைய ஏற்பாடொன்று காணப்பட்ட போதிலும் " இச்சட் டம் செயல்படுத்தப்பட ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் வாக் காளர் ஒருவர் என்ற வகையில் தமக்கு வாக்குச் சீட்டொன்று கையளிக்கப்படுவ தற்கு முன்னர் உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலு வலருக்கு அல்லது அவரது அதிகாரத்தின் செயல்படுகின்ற ஒருவருக்கு செல்லு படியான ஆளடையாள ஆவணமொன்றைப் பரீசீலிப்பதற்காக சமர்பித்தல் வேண்டும்".

02. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 176/2006ஆம் இலக்க வழக்குத் தொடர்பாக எடுக் கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க உள்ளூர் அதிகார சபை வாக்கெடுப்பொன்றில் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் செயல்படுத்தப்படல் வேண்டுமென முடிவெடுக்கப்பட் டது.

03. எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள யாழ்ப்பாண மாநகர சபை, வவுனியா நகர சபைத் தேர்தலுக்குரிய வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்கின்றபோது வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைக்கு மேலதிகமாக கீழ்வரும் ஆளடையாள ஆவ ணங்களில் ஏதேனும் ஓர் ஆவணத்தை எடுத்துச் செல்வது இன்றியமையாததாகும்

*1. ஆள்கள் பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை*
*2. செல்லுபடியான கடவுச்சீட்டு*
*3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்*
*4. புகையிரத பருவச்சீட்டுடன் கூடிய புகையிரதப் பருவச்சீட்டு அடையாள அட்டை*
*5. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை*
*6. முதியோர் அடையாள அட்டை*
*7. ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் மதகுருமார்கள் சார் பாக விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டை.*

(செல்லுபடியான காலஎல்லை முடிவுற்ற அடையாள அட்டைகள்/ ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

04. வாக்காளர் ஒருவரிடம் மேற்குறித்த அடையாள அட்டைகளில் எந்தவொரு அடை யாள அட்டையும் காணப்படாதவிடத்து அல்லது தம்மிடம் உள்ள ஆளடையாள அட்டை காலாவதியாகியுள்ள விடத்து அல்லது வாசிக்க முடியாதவாறு எழுத்துக் கள் அழிந்து போயுள்ள விடத்து, தாம் வதிகின்ற கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிராம அலுவலரைச் சந்தித்து தேர்தல்கள் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படு கின்ற அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்ளவும்.

05. இத்தற்காலிக அடையாள அட்டையை வழங்குவதற்காக எவ்வித கட்டணமும் அற விடப்படமாட்டாவெனவும் வாக்காளர், 1 1/4" X 1" அளவுடைய அண்மையில் எடுக்கப்பட்ட கறுப்பு, வெள்ளை அல்லது வர்ணப் புகைப்படங்களின் இரண்டு பிரதி களை மாத்திரம் வழங்க வேண்டுமெனவும் அறிவிக்க விரும்புகின்றேன். அடை யாள அட்டைகளை விநியோகிப்பதற்குத் தேவையான அட்டைகள் உரிய கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

06. வாக்கெடுப்பு நிலையத்தில் மேற்குறித்த புகைப்படத்துடன் கூடிய செல்லுபடி யான அடையாள அட்டைகளுள் ஒன்று அல்லது தேர்தல்கள் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டையொன்றின் மூலம் வாக்காளர் ஒருவரின் ஆளடையாளத்தை நிரூபிக்க முடியாமல் போகின்றமை வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையீனம் ஒன்றாகக் கரு தப்படும்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய.
2009.06.15.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

DChp/w/in/ProvinElec/JafPrsRel01-TA (கி/559014)

## கூ..சங்கத்தின் சுத்திகரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுற வுச்சங்கத்தின்வாகன சுத்திகரிப்பு நிலை யம் இன்று சாவகச் சேரி புகையிரத நிலைய வீதியில் ஆரம்பிக்கவுள்ளதாக சங்கப் பொதுமுகா மையாளர் அறிவித் துள்ளார். (203- 207)

## 3 840 வாகனங்களுக்கு வரி அனுமதிப்பத்திரம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் தில் கடந்த ஜனவரி தொடக்கம் மே மாதம் 10ஆம் திகதி வரை 3ஆயிரத்து 840 வாக னங்களுக்கு வாகன வரி அனுமதிப்பத் திரம் வழங்கப்பட் டுள்ளது.

இப்பிரிவில் மொத்தமாக 6 ஆயி ரத்து 221 வாகனங் கள் பாவனையில் உள்ளன. மிகுதி வாக னங்களுக்கு அனு மதிப்பத்திரம் பெற் றுக் கொள்ளவில்லை யென்று பிரதேச செய லகக் கணக்காளர் த. தயாளினி தெரிவித் துள்ளார். (203-100)

## பங்கீட்டுக்கு அரிசி

நவாலி, ஜூன்15

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுற வுச் சங்கக் கிளை யில் இடம்பெயர்ந் தோர் நிவாரணம், சமுர்த்தி நிவாரணம், பங்கீட்டு நிவார ணம்பெறுவோருக்கு 2கிலோ அரிசி வீதம் பங்கீட்டுக்கு வழங் கப்படுகின்றது. (203-100)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (சு.வே)

தோற்றம்: 24✱05✱1921
மறைவு: 22✱06✱2007
திதி: பூர்வபட்ச சப்தமி (15.06.2009)

வாழ்க்கைப் புதிரில்
நிரப்பிட இயலா வெற்றிடம்
உங்களது இழப்பு
ஆத்மா சாந்திபெற அருள
சித்திர வேலாயுத சுவாமி பாதம் பணிகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாவற்குழி. (C/559001) குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1095 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

LEO 02 15 22 23

12-06-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,848,950/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 194,530 | 20/- | 3,890,600/- |
| 2 இலக்கங்கள் | 17,897 | 40/- | 715,880/- |
| 1 இல. + லக்கினம் | 17,877 | 60/- | 1,072,620/- |
| 2 இல. + லக்கினம் | 1,641 | 200/- | 328,200/- |
| 3 இலக்கங்கள் | 473 | 1000/- | 473,000/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 10,000/- | 450,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,848,950/- | 2,848,950/- |
| மொத்தம் | | | 10,179,250/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 232,471 | | 10,679,250/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

2009 ஜூன் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 500242109-3-19 |
| கம்பஹா | 500244981-7-40 |
| பதுளை | 500234853-8-17 |
| திருகோணமலை | 500238229-8-25 |
| காலி | 500236513-3-08 |

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிவலிங்கம் ஜனோசன்

தோற்றம்: 24.10.1992 மறைவு: 03.05.2009

கடந்த (03.05.2009) அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (16.06.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும். அத் தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னா ரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகேசன் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர். (86059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளிகள் வருடத்துக்கு ஒருமுறை கண் பரிசோதனை மேற்கொள்வது அவசியம்


**கேள்வி:** 'ஆலிவ்' எண்ணெய் உபயோகித்தால் இருதயநோய் வராது என்கின்றார்களே உண்மையா? 'ஆலிவ்' எண்ணெயை எப்படி உபயோகிப்பது?

**பதில்:** ஆலிவ் (Olive Oil) எண்ணெய் இருதய நோய்க்கு தடுப்பு மருந்து அல்ல. இருதய நோய்க்கு ஒரு காரணம் இரத்தத்தில் கொலஸ்ரோல் என்கின்ற கொழுப்புச் சத்து அதிகரிப்பதே. இந்த கொலஸ்லோல் சத்து, நாம் உணவுமுறைகளில் உபயோகிக்கும் எண்ணெய் வகைகளில் இருந்து பெறப் படுவதால் - சமையல் செய்யும்போது எண்ணெய் உபயோகிப்பதை இயலுமான அளவுக்குக் குறைக்கவும், எண்ணெய்ப் பொரியல்கள், வதக்கல்களை தவிர்க்கவும் வைத்தியர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

எண்ணெய்வகைகளில் கொழுப்புச் சத்து அல்லது கொழுப்பை தரவல்ல Fatty Acid கூடிய எண்ணெய் வகைகளோடு ஒப்பி டும் பொழுது - ஆலிவ் எண்ணெய் - உடலுக்கு பாதகமற்ற - Monosaturated Fat என்கின்ற கொழுப்பை கொண்டுள்ள தால் சமையலில் ஆலிவ் எண்ணெய் உப யோகிப்பதை வைத்தியர்கள் அறிவுறுத்து கின்றார்கள். ஆலிவ் எண்ணெய் உபயோ கிக்கும் போது - இரத்தத்தில் உள்ள கொலஸ்திரோல் அளவு குறைக்கப்படுவ தாகவும் அதனால் இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படுவது தடுக்கப்படுவதாக வும் ஆய்வுகளிலிலிருந்து அறியப்பட்டுள் ளது. இது தவிர சூழலில் உள்ள நச்சுவாயுக்களால் ஏற்படும் அழிவுப்பொருட்களை தடுக்கின்ற இரசாயனப் பொருளான Antioxidant ஆலிவ் எண்ணெயில் இருப்பதால் ஆலிவ் எண்ணெய் அழகுவனப்பு (Cosmetic)- பொருளாகவும் கருதப்படு கிறது. ஆலிவ் எண்ணெய் - மத்தியதரைக் கடல் நாடுகளில் வளருகின்ற ஆலிவ் மரத்தின் பழங்களிலிலிருந்து எடுக்கப்படுகிறது. மற்றைய எண்ணெய்களை விட விலையுயர்ந்தது ஆலிவ் எண்ணெய். எப்படி ஆலிவ் எண்ணெய் வடித்தெடுக்கப்படுகின்றது என்ற வகையில் - ஆலிவ் எண்ணெயில் 4 தரங்கள் உண்டு. உயர்தரமான - Extra Virgin, மற்றும் அடுத்தடுத்த தரங்களில் Virgin, Pure, என்று வந்து Extra Light என்கின்ற இறுதித் தரம் வகையான 4 தரங்கள் உள்ளன. சலாட் (Salad) மற்றும் பாணில் தொட்டுச் சாப்பிட, சில காய்கறிவகைகளை, உருளைக்கிழங்கு என்பவற்றைவதக்க ஆலிவ்எண்ணெய் உபயோகமாகின்றது. காய்கறிகளை வதக்கி, மீன், இறைச்சி என்பவற்றை அவித்து அதன் மேல் ஆலிவ் எண்ணெய் ஊற்றி பிரட்டி மேல் நாட்டில் உண்பார்கள். ஆனால் இந்த எண்ணெயின் விலையாலும் எமது சமையல் முறைகளாலும், பெரிதளவில் இந்த எண்ணெயை எமது சமையல்களுக்கு உபயோகிப்பது பொருத்தமாக இல்லை. எமது நாட்டுச் சமையல்களில் பொரியல் என்பது முக்கியமானது. இப்படிப் பொரிப்பதுக்கு எண்ணெய் கொதிநிலை அடையும் தன்மை ஆலிவ் எண்ணெய்க்கு இருந்தாலும் - அதிகளவு தேவை என்பதால் பொருளாதாரரீதியில் ஏற்புடையதாக இல்லை. மற்றைய Hydrogenated Polysaturated எண்ணெய் வகைகளான Palm Oil, Corn Oil, என்பவை ஓரளவு கொலஸ்ரோல் தராத எண்ணெய் வகைகளாக இருந்தாலும் எமது பெண்கள் தமது சமையல் அறைகளில் இந்த வகை எண்ணெய்களை திரும்பித் திரும்பி பொரிப்பதுக்கு உபயோகிப்பதால் - அவை நச்சுத்தன்மை அடைவதை அறி வதில்லை. ஆனால் ஆலிவ் எண்ணெய் திரும்ப திரும்ப உபயோகிப்பதற்கு ஏற்றது.

***






**கேள்வி:** கடந்த வருடம் எனது இடது கண்ணுள் ஏதோ துகள்கள் மிதப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. கண் டாக்டரிடம் காட்டியபோது, 35 வயதுக்கு மேல் இப்படி ஏற்படுவது சாதாரணமான காரியம், பயப்பட ஒன்றுமில்லை என்று கூறினார். இந்த வருடமும் அதே டாக்டரை சந்தித்து இதே பிரச்சினை தொடர்ந்தும் இருப்பதைக் கூறினேன். அவர் எனது இரத்தத்தில் சர்க்கரை சத்தை பரிசோதித்து வரும்படி கூற, இரத்த சர்க்கரை சத்து அதிகரித்து இருந்தது அறியப்பட்டது. அதேவேளை பார்வைக்குறைவு இருந்ததும் கண்டறியப்பட்டது. டாக்டர் - முதலில் இரத்தத்தில் சர்க்கரை சத்தை குறைத்த பின்னர் - கண்ணாடி எடுக்கும்படி கூறினார். இப்பொழுது நான் நீரிழிவுக்கு மருந்து செய்கின்றேன். எனக்கு சிலவேளைகளில் பார்வை மறைக்கின்றது. தெளிவில்லாமல் போகின்றது. எனது பார்வை இழந்து குருடாகி போய் விடுவேனோ என்று அச்சமாக இருக்கின்றது. இதற்கு பரிகாரம் கூறவும்.


இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**பதில்:** உங்கள் கண் வைத்திய நிபுணர் கூறியபடி கண்ணுக்குள் மிதக்கும் துகள் உணர்வு ஒரு நோயல்ல. இதனை Floaters என்று கண் மருத்துவர்கள் கூறுவார்கள். இதற்கு எதுவித சிகிச்சையும் தேவையில்லை.



இரண்டாவது தடவை நீங்கள் இதே பிரச்சினைக்கு போயிருந்தபோது நிச்சயம் - Opthalamos Copy என்கின்ற கண் பரிசோதனை மூலம் கண் வைத்திய நிபுணர் உங்கள் கண்களுள் பரிசோதித்திருப்பார். அந்த வேளையில் - கண்களின் திரையில் (Retina) இரத்த கசிவு, படிவு அல்லது Micro Aneurysm எனப்படும் சிறு குருதிக் குழாய்களில் வீக்கம் என்பவற்றை கண்டிருப்பார். கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயின்போது - கண்களில் தாக்கங்கள் ஏற்படுவதால் மேற்கூறிய குறிகள் காணப்படுகின்றன. எனவேதான் உங்களுக்கு நீரிழிவு உள்ளதா என்பதை பரிசோதித்துள்ளார். நீரிழிவு நோய் [illegible]க்கின்ற முக்கிய உறுப்புகளில் முதன்மையாவது கண். நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் கண்களில் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும். தொடர்ந்து நீரிழிவு நோய் கட்டுப்பாடின்றி இருப்பின் இறுதியில் நிச்சயம் கண்பார்வை இல்லாமலே போய்விடும். உங்கள் நீரிழிவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் - ஓரிரு வாரங்களில் உங்கள் பார்வை கலங்கல் இல்லாமல் தெளிவாகிவிடும். அதுமட்டுமல்ல, நீரிழிவு நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் ஒரு வருடத்துக்கு ஒரு தடவையாவது கண் பரிசோதனை அவசியம் என்பதை நினைவில் கொள்ளவும்.

***

**கேள்வி:** எனது தாய் [illegible] ஒரு வாரத்துக்கு முன்னர் இ[illegible]ல் புரைக்கு (Cataract) [illegible]சை செய்யப்பட்டது. ஆரம் [illegible] சிகிச்சைக்குப் பின்னர் [illegible]வ தெளிவாக இருந்தது. ம[illegible]ாள் இடது கண்ணுள் சிறுசிறு துணிக்கைகள் மிதந்து செல்வதாக தெரிகிறது என்று கூறினார். சிகிச்சை செய்த கண் மருத்துவரிடம் கொண்டு சென்று காண்பித்தோம். அவர் இது சிகிச்சைக்கு பின்னர் சாதாரணமாக நடைபெறும் விஷயம்தான் என்று கூறி கண் சொட்டு மருந்து தந்தார். அடுத்த நாள் காலையில் கண்விழித்ததும் அவரால் அந்தக் கண்ணால் எதையுமே பார்க்க முடியவில்லை. உடனடியாக கண் மருத்துவரிடம் எடுத்து சென்றோம். அவர் கண்ணுக்குள் வீக்கம் ஏற்பட்டிருப்பதாக கூறி - இரண்டொரு நாட்களில் சரியாகி விடும் என்றார். கண்பார்வை சரியாகி திரும்பவரும் என்று அவர் கூறினாலும், எமக்கு பயமாக இருக்கிறது. உங்கள் ஆலோசனை - கருத்து தரவும்.

**பதில்:** இன்று உலகில் நடைபெறும் சத்திர சிகிச்சைகளில் பாதுகாப்பானதும் பிரச்சினையற்றதுமான சத்திர சிகிச்சை - Cataract எனப்படும் - கண் புரை, கண்களில் பூவிழுதல் என்பவற்றுக்கு செய்யும் சத்திர சிகிச்சையாகும். இதனை Phacoemulsification என்று அழைப்பார்கள். சிறிய துவாரம் ஊடாக பழுதாகிய கண் வில்லையை லேசர் மூலம் கரைத்து உறிஞ்சி அந்த வெற்றிடத்தில் செயற்கை வில்லையை செருகுதல் இந்த சிகிச்சையின் அடிப்படை. இந்த பாதுகாப்பான சத்திர சிகிச்சையில் ஒரு சிலருக்கு சிகிச்சையின் பின்னர் அந்த இடத்தில் அழற்சி ஏற்படுவதுண்டு. இதனால் Floaters என்கின்ற மிதந்துசெல்லும் துணிக்கைகள் ஏற்பட்டு கண்பார்வை மங்கலடைவதும் உண்டு. அப்படியான வேளைகளில் கண்களில் இருந்து திரவத்தைப் பெற்று - அழற்சியுடன் தொற்றுகளும் உள்ளனவா என்பதை அறியவேண்டும். அப்படி தொற்றுகள் இருந்தால் அதற்கு ஏற்ற மருந்துகள் உபயோகிக்கப்பட வேண்டும். உங்களுக்கு சத்திர சிகிச்சை செய்த கண் மருத்துவரின் ஆலோசனைப்படி நடவுங்கள். நிச்சயம் உங்கள் தாயின் கண்கள் நல்ல நிலைக்கு திரும்பும்.

***

**கேள்வி:** கடந்த வருடம் வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்த போது, பல பெண்களோடு பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளும் சம்பவங்கள் எனக்கு ஏற்பட்டன. இரண்டு மாதங்களுக்கு முன்னர் எய்ட்ஸ் பரிசோதனை செய்து பார்த்தேன். ஆனால், எய்ட்ஸ் தொற்று எதுவும் இல்லை என்று தெரியவந்தது. இதனை எனக்கு எய்ட்ஸ் ஏற்பட்டிருக்காது என்று கொள்ளலாமா? அல்லது எதிர்காலத்தில் ஏய்ட்ஸ் ஏற்படாது என்று ஏற்றுக் கொள்ளலாமா? சுய இன்பம் பெறுவதால் ஆண்மைக் குறைவு ஏற்படுமா? ஆண்மைக் குறைவுக்கு மது உபயோகிப்பது காரணமாகுமா?

**பதில்:** நம்பகத்தன்மையுள்ள பரிசோதனைக் கூடத்தில் உங்களது எச்.ஐ.வி. பரிசோதனை நடைபெற்று முடிவு HIV இல்லை என்று தெரிந்தால் - உங்களுக்கு HIV தொற்று இல்லை என்று நம்பலாம். எதிர்காலத்தில் HIV தொற்று ஏற்படாது என்பது உங்கள் பழக்கவழக்கத்தில் - நடவடிக்கைகளில் தங்கியுள்ளது. பாதுகாப்பில்லா உடலுறவுகளால் ஒரு தடவை HIV தொற்று ஏற்படவில்லை என்பதால் - இனியும் இத்தகைய தொடர்புகளால் HIV ஏற்படாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. எனவே, எதிர்காலத்தில் நீங்கள் அதிர்ஷ்டசாலியாக இருப்பீர்கள் என்று சொல்ல முடியாது. இப்படியான பாதுகாப்பற்ற உடலுறவுகளை தவிர்த்தக்கொள்ளுங்கள்.

சுயஇன்பம் -Masturbation இற்கும் ஆண்மைக் குறைவுக்கும் எந்தவிதமான மருத்துவத் தொடர்பும் இல்லை. உண்மையைக் கூறுவதென்றால் சுயஇன்பம் - பாதுகாப்பற்ற உடலுறவை விட - பாலியல் மன உளைவுகளை பாதுகாப்பாக தீர்ப்பதற்கு உதவும். ஆனால், அதுவும் ஒரு வரையறைக்குள் இல்லாவிடில் மனதளவில் தாக்கத்தை உண்டுபண்ணலாம். மது அருந்துவதற்கும் இல்லை. ஆனால், மதுபோதையில் இருப்பவருக்கு சரியாக, திருப்தியாக உடலுறவு கொள்ளமுடியாது. அநேகமான ஆண்மைக் குறைவுகளுக்கு - மனதளவில் அல்லது மனோவியலில் ஏற்படும் தாக்கங்களே காரணம். எதற்கும் நீங்கள் உளவள ஆலோசனை பெறுவது நல்லது என்று நம்புகின்றேன்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரி வினாத்தாள்

# இணைந்தகணிதம் - 01

* ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. a) $f(x) = p(x^2 + 1) - x$ என்பது ஓர் இருபடிச் சார்பு ஆகும்.
   1. x இன் எல்லாப் பெறுமானங்களுக்கும் $f(x) > 0$ ஆகும். pஇன் பெறுமானங்களைக் காண்க.
   2. $f(x) = 0$ எனும் இருபடிச் சமன்பாடு மெய் மூலங்களைக் கொண்டிருப்பதற்கான pஇன் பெறுமானங்களைக் காண்க.
   3. $f(x) = 0$இன் மூலங்கள் $\alpha, \beta$ எனின், $1/\alpha, 1/\beta$ என்பவற்றை மூலங்களாகக் கொண் இருபடிச் சமன்பாட்டைக் காண்க.
   4. $f(x)$ ஆனது $px^3 + qx + c$ இன் ஒரு காரணி எனின், q ஐ p இன் உறுப்புகளில் காண்க. c இன் பெறுமானம் யாது?

   b) பல்லுறுப்பி $g(x)$ ஆனது $(x-1)(x-2)(x-3)$ ஆல் வகுக்கப்படும்போது மீதி $a(x-2)(x-3) + b(x-3)(x-1) + c(x-1)(x-2)$ ஆகும். ஒருமைகள் a, b, c ஐ $g(1), g(2), g(3)$இல் காண்க. இதிலிருந்து $x^5 + kx^2$ஐ $(x-1)(x-2)(x-3)$ஆல் வகுக்கும்போது மீதியில் $x^2$ இல்லாதிருப்பதற்கு kஇன் பெறுமானத்தைக் காண்க.

02. a) 1, 1, 1, 1, 2, 2, 3, 4, 5 ஆகிய இலக்கங்களிலிருந்து தடவைக்கு 3 இலக்கங்கள் வீதம் எடுத்து அமைக்கக்கூடிய வேறுவேறான எண்களின் எண்ணிக்கையைக் காண்க.

   b) $(x2 - 2k/x)^{10}$ இன் விரிவில் $x^2$ இன் குணகம் $1/x$ இன் குணகத்திற்கு சமமாகும். k இன் பெறுமானத்தைக்காண்க.

   c) $(1 + x)^n = {}^nC_0 + {}^nC_1 x + {}^nC_2 x^2 + \dots\dots + {}^nC_n x^n$ ஆகும்.

   $U_r = 1/r + 1{}^nC_r$ எனின் $U_r = 1/n + 1{}^{n+1}C_{r+1}$ எனக் காட்டி இதிலிருந்து $\sum_{r=1} U_r$ ஐக் காண்க.

03. a) n ஒரு நேர் நிறை எண்ணாக இருக்க $5^{2n} + 2^{3n+4}$ என்பது 17ஆல் வகுபடும் எனக் கணிதத் தொகுத்தறி முறையால் நிறுவுக.

   b) $\sum_{K=1} K.r^K$ ஐக் காண்க.

   $|r| < 1$ எனின் $\sum_{k=1}^{\infty} k.r^k$ ஐ உய்த்தறிக.

   c) $U_r = r(r+1)(r+2)$ எனின் $Ur = f(r) - f(r-1)$ ஆகுமாறு $f(r)$ஐக் காண்க. இதிலிருந்து ஐக்

   $\sum_{r=1}^{n} v_r$ காண்க.

   $Vr = (r+1)(r+2)(r+3)$ எனின் மேலே பெற்ற முடிவைப் பயன்படுத்தி $\sum_{r=1}^{n} v_r$ ஐ உய்த்தறிக.

04. a) சிக்கலெண்கள் $Z_1, Z_2, Z_3, Z_4$ என்பன $Z_1 = 1 - 2i, Z_2 = 4 + 3i, Z_3 = 10i$ ஆகவும், $Z_1/Z_2 = Z_3/Z_4$ ஆகவும் உள்ளன. $Z_4$ ஐக்காண்க.
   $Z_4 - Z_3 / Z_2 - Z_1 = Z_3/Z_1$ எனக்காட்டுக.

   b) சிக்கலெண்கள் $Z_1 = 1, Z_2 = \cos\theta + i \sin\theta$ ஆகும்.
   $(0 < \theta < \pi/2)$ ஆகன் வரிப்படத்தில் $Z_1, Z_2$ என்னும் சிக்கலெண்களை A, B என்னும்புள்ளிகள் வகைகுறிக்கின்றன. $(Z_1 + Z_2)$ ஐ வகைகுறிக்கும் புள்ளி C ஐக் காண்க.
   இதிலிருந்து $|Z_1 + Z_2|$.. $(Z_1 + Z_2)$இன் வீசல் என்பவற்றைக்காண்க. $(Z_1 + Z_2)$ஐ $r(\cos\alpha + i \sin\alpha)$ எனும் வடிவில் எழுதுக.

   $1/Z_1 + Z_2 = 1/2 - i \tan \theta/2$ என நிறுவுக.

   மேலும் $-\pi < \theta < \pi$ எனின், $|Z_1 + Z_2|$ இன் உயர்வு, இழிவுப் பெறுமானங்களையும் அதற்கொத்த $Z_2$ இன் பெறுமானங்களையும் எழுதுக.

05. a) x ஆரையில் இருக்க $(\lim_{x \to 0} \frac{\sin x}{x} = 1)$ எனக்கொண்டு,

   1. $\lim_{x \to 0} \frac{1-\cos 2(3\sin x)}{1-\cos 2x}$
   2. $\lim_{x \to 0} \frac{\sin x - \cos x}{x - \pi/4}$ ஐ காண்க.

   x ஐக் குறித்து sin x இன் வகையீட்டுக் குணகத்தை முதல் தத்துவங்களிலிருந்து பெறுக. இதிலிருந்து $\sin^{-1}x$, cosec x இன் வகையீட்டுக் குணகங்களை உய்த்தறிக.
   $y = e^{-x} \sin x$ எனின்,
   $d^2y/dx^2 + 2\, dy/dx + 2y = 0$ எனக் காட்டுக. இதிலிருந்து $(dy/dx)_{x=0}$, $(d^2y/dx^2)_{x=0}$, $(d^3y/dx^3)_{x=0}$, $(d^4y/dx^4)_{x=0}$ என்பவற்றைக் கணிக்குக.

   b) வளையி ஒன்று $x = a \cos^3\theta$, $y = a \sin^3 \theta$ எனத் தரப்படுகிறது.
   $dy/dx$ , $2\, d^2y/dx^2$ என்பவற்றைக் காண்க. வளையிக்கு $\theta = \pi/4$இல் தொடலியின் சமன்பாட்டைக் காண்க.

06. a) பொருத்தமான பிரதியீட்டைப் பயன்படுத்துக.
   1. $\int_0^1 x(1-x)^{3/2}\, dx$
   2. $\int (dx/ (2-x)^{3/2} (1-x)^{1/2})\, dx$ $(1 < x < 2)$ $[x = \cos^2\theta + 2 \sin^2\theta]$

   b) $d/dx\,(x\ln x - x) = \ln x$ எனக்காட்டுக. $(\ln x)^2 = (\ln x)(\ln x)$ என எழுதி, பகுதிகளாகத் தொகை இடும் முறையை உபயோகித்து,
   $\int^2 (\ln x)^2\, dx = 2\,[\ln 2\,(\ln 2 - 2) + 1]$ எனக்காட்டுக.

   c) $f(x) = 1/(x+2)(x^2 + 8)$ ஐ பகுதிப் பின்னங்களில் எழுதி $\int f(x)dx$ ஐக்காண்க.

07. இரு புள்ளிகள் $A=(x_1, y_1)$, $B = (x_2, y_2)$ என்பன $l = ax + by + c = 0$ எனும் கோட்டின் எதிர்ப்பக்கங்களில் இருப்பதற்கான நிபந்தனையைக் காண்க.
   புள்ளிகள் A, B இன் ஆள்கூறுகள் முறையே (-1,5), (3,2) ஆகும். ABஇன் செங்குத்து சமவெட்டியின் சமன்பாட்டைக் காண்க.
   ABC ஒரு சமபக்க முக்கோணியாக அமையுமாறும் Cயும் (1,1) என்ற புள்ளியும் ABஇன் எதிர்ப் பக்கங்களில் இருக்குமாறும் புள்ளி Cஇன் ஆள்கூறுகளைக் காண்க.

08. $4x + 3y - 25 = 0$ எனும் நேர்கோடு $x^2 + y^2 - 25 = 0$ எனும் வட்டத்தை தொடும் என நிறுவி தொடு புள்ளியின் ஆள்கூறுகளைக் காண்க.
   $4x + 3y - 25 = 0$ எனும் நேர்கோடு k இன் எல்லா மெய்ப் பெறுமானங்களுக்கும்
   $x^2 + y^2 - 25 + k(4x + 3y - 25) = 0$ ஆல் தரப்படும் எல்லா வட்டங்களையும் தொடும் என நிறுவுக.
   இத்தொகுதியில் $y = 7$ எனும் நேர்கோட்டைத் தொடும் இரு வட்டங்களின் சமன்பாடுகளைக் காண்க. இவ்விரு வட்டங்களின் மையங்களை இணைக்கும் நேர்கோடும் $y = 7$ என்ற தொடலியும் இடைவெட்டும் புள்ளியின் ஆள்கூற்றைக் காண்க.
   இதிலிருந்தோ அல்லது வேறு வழியாகவோ இவ்விரு வட்டங்களுக்குமான மற்றைய நேரடிப் பொதுத்தொடலியின் சமன்பாட்டைப் பெறுக.

09. a) $\cos\theta/2 + \sin \theta/2 = \sqrt{1 + \sin\theta}$, $(0 < \theta < 90)$ எனக்காட்டுக.

   $\cos\theta/2 - \sin \theta/2$ இற்கு ஒத்த ஒரு கோவையை எழுதுக.
   இதிலிருந்து $\cos 15^0$இன் பெறுமானத்தைக் கணிக்குக. (விடையை சேடுகளில் விடுக.)

   b) தீர்க்குக. $\sin^{-1} x + \sin^{-1} 2x = \pi/3$ $(x > 0)$

   c) யாதாயினும் ஒரு முக்கோணி ABC இற்கு
   1. $C = b\cos A + a\cos B$ என நிறுவுக.
   $\cos A/a + \cos B/b = c/ab$ என நிறுவி இதிலிருந்து $\cos A/a + \cos B/b + \cos C/C$ இற்கு a, b, c இன் உறுப்புகளில் பெறுமானத்தைக் காண்க. இதிலிருந்து cosCஐ a, b, cஇன் உறுப்புகளில் காண்க.
   2. சைன் விதியை (நிறுவலின்றி) கூறுக.
   $a.\cos A + b.\cos B = c.\cos(A-B)$,
   $(b+c) \tan A/2 - (b - c)\cot A/2 = 2b\cot B$ என நிறுவுக.

## இணைந்த கணிதம் - 2

(ஆறு வினாக்களுக்கு விடை தருக)

01. a) ஓய்விலிருந்து புறப்படும் ஒரு வண்டி தனது பயணத்தின் முதல் பகுதியை சீரான ஆர்முடுகல் $a_1$ உடனும், இரண்டாவது பகுதியை சீரான வேகம் V உடனும், மூன்றாம் பகுதியை அமர்முடுகல் $a_2$ உடனும் இயங்கி ஓய்வுக்கு வருகிறது. முழுப் பயணத்திற்குமான சராசரி கதி 7/8V எனின், முழு நேரத்தின் 3/4 பங்கு தூரம் அவ்வண்டி சீரான வேகத்துடன் செல்கிறது எனக்காட்டி, முழுத்தூரத்தின் என்ன பின்னம் சீரான வேகத்துடன் கடக்கப்படுகிறதென்பதையும் காண்க.

   b) துடுப்பாட்ட வீரர் ஒருவர் விக்கற்று W இலும், பந்து தடுப்பவர் F இலும் இருக்கின்றனர். பந்து தடுப்பவர் ஓடக்கூடிய வேகத்தின் 11/2 மடங்கு வேகத்தில் $\overrightarrow{WF}$ உடன் கூர்ங்கோணம் $\alpha$ ஆக்கும் திசையிலே பந்து தரையின் வழியே இயங்கக்கூடியதாக அதனைத் துடுப்பாட்ட வீரர் அடிக்கிறார். பந்து தரைவழியே மாறா வேகத்துடன் இயங்குகிறதெனக் கொண்டு, இயன்றளவு விரைவாகப் பந்தை நிறுத்த பந்து தடுப்பவர் உச்சக்கதியில் ஓடுகிறார். அவர் எத்திசையில் ஓடவேண்டும் எனக்காண்க. அவர் S தூரம் ஓடி பந்தைப் பிடித்தார் எனின் $|\overrightarrow{WF}| = S/2\{\sqrt{4 - 9\sin^2\alpha} + 3\cos \alpha\}$ எனக்காட்டுக. இங்கு $\alpha < \sin^{-1} (2/3)$ ஆகும்.

02. a) M திணிவுடைய ஒப்பமான ஆப்பு ஒன்றின் மையத்தினூடான நிலைக்குத்து குறுக்கு வெட்டுமுகம் ABC எனும் இரு சமபக்க முக்கோண வடிவிலுள்ளது. அதன் சாய்முகங்கள் கிடையுடன் $\alpha$ கோணத்தை ஆக்குகின்றன. m, km திணிவுகளுடைய இரு துணிக்கைகள் சாய்முகங்கள் AB, ACஇல் வைக்கப்பட்டு மெதுவாக விடப்படுகின்றன. $k > 1$ ஆகும்.

   1. ஆப்பானது ஒப்பமான கிடைமேசையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது எனின், துணிக்கைகள் ஒவ்வொன்றினதும் ஆர்முடுகல்களைக் காண்க.
   2. ஆப்பானது மேசை மீது இயங்குவதற்கு சுயாதீனமுடையதெனின் துணிக்கைகள் ஆப்பு என்பவற்றின் ஆர்முடுகல்களைத் துணிவதற்குப் போதுமான சமன்பாடுகளை எழுதுக. ஆப்பின் ஆர்முடுகல் CB திசையில் $(k-1)\, mg\sin\alpha/ M + m (k+1) \sin\alpha$ எனக்காட்டுக.

   b) 1000kg திணிவுடைய கார் ஒன்று $\sin^{-1}(1/20)$ எனும் சாய்வில் மேல்நோக்கி $25\,ms^{-1}$ சீரான கதியில் செல்கிறது. எஞ்சின் 20kW வலுவில் வேலை செய்கின்றதெனின் இயக்கத்திற்கான தடைவிசையைக்காண்க.
   இப்போது அதன் பாதை மட்டமான தரையாக அமையுமெனின், தடைவிசை மாறவில்லையெனக் கொண்டு காரின் ஆர்முடுகலைக் காண்க.

03. a) km திணிவுடைய பீரங்கி ஒன்றிலிருந்து m திணிவுடைய குண்டு ஒன்று சுடப்படுகிறது. பீரங்கியின் குழாய் கிடையுடன் $\alpha$ கோணத்தை அமைக்கிறது. குண்டு கிடையுடன் $\beta$ கோணத்தில் குழாயிலிருந்து வெளியேறும் எனின், $\tan\beta = k + 1/k \tan\alpha$ எனக்காட்டுக.

   b) 2m, m திணிவுகளையுடைய A, B எனும் இரு சிறிய கோளங்கள் ஓர் ஒப்பமான கிடைமேசை மீது முறையே 5u, 3u கதிகளுடன் எதிர்த்திசைகளில் இயங்கி நேரடியாக மோதுகின்றன. கோளங்களுக்கிடையே தன்னுருவடைதற்குணகம் e எனின், மொத்தலின் பின்னர் A, Bஇன் வேகங்களைக் காண்க. A இன் மீது B ஆல் ஏற்பட்ட கணத்தாக்கு $16/3\,mu(1+e)$ எனக்காட்டுக.

   மொத்தலின் பின் B இன் கதி 3u ஆக இருக்க eஇன் பெறுமானத்தைக் காண்க. B இக்கதியுடன் இயங்கி உடனடியாக ஓய்விலுள்ள km திணிவுடைய C எனும் துணிக்கையுடன் மோதி இணைந்து விடுகிறது. இணைந்த பின் அதன் வேகத்தைக் காண்க. மூன்றாவது மோதல் ஒன்று நிகழ்வதற்கு k இன் பெறுமான வீச்சு யாது?

04. a) நிலையான புள்ளி Aஇற்கு இணைக்கப்பட்ட நீள $l$இலேசான நீளா இழையின் மறுமுனையில் m திணிவுடைய துணிக்கை P இணைக்கப்பட்டுள்ளது. துணிக்கை சுயாதீனமாகத் தொங்கும் நிலையில் கிடையாக 3h/4 எனும் வேகத்துடன் வீசப்படுகிறது.

   1. இழை கிடையாக வரும்போது துணிக்கையின் கதியைக் காண்க.
   2. இழை AP கிடை நிலையிலுள்ளபோது, இழை புள்ளி Bஇலுள்ள ஒப்பமான சிறிய முனையுடன் தொடுகையுறுகிறது. (இங்கு $AB < l$) இழை BP மேன்முக நிலைக்குத்துடன் கோணம் $\theta$ ஆக்கும் நிலையில் துணிக்கையின் கதி v இழையின் இழுவை T என்பவற்றை $\theta$ இன் சார்பில் காண்க. துணிக்கை B ஐ மையமாகக்கொண்ட வட்டம் ஒன்றில் இயங்க AB இன் இழிவுப் பெறுமானம் யாது?

   b) நேர்கோடொன்றில் இயங்கும் துணிக்கையொன்றின் இடப்பெயர்ச்சி x உம் அதன் வேகம் $v(=\dot{x})$ ஆகவுமிருக்க, $v^2 = \dot{x}^2 = -k^2(x^2 - 6ax + 8a^2)$ என்பதால் தரப்படுகிறது.

   1. இவ்வியக்கம் ஓர் எளிமை இசை இயக்கம் எனக்காட்டி அலைவு மையம், வீச்சம், அலைவு காலம் என்பவற்றைக் காணக.
   2. x=2a இலிருந்து 7a/2 இற்கு செல்ல எடுத்த நேரம் என்ன?

05. a) ABCDEF ஓர் ஒழுங்கான அறுகோணி விசைகள் P, 2P, 3P, 4P, 5P என்பன AB, CA, FC, DF, ED வழியே தாக்குகின்றன. BC, FA, FE வழியே தாக்கி அத்தொகுதியை சமநிலையில் வைத்திருக்கும் விசைகளைக் காண்க.

   b) இரு இலேசான சமநீளமுள்ள கோல்கள் AB, AC என்பன Aஇல் ஒப்பமாகப் பிணைக்கப்பட்டு முனைகள் Bஉம் Cஉம் ஒப்பமான கிடைத்தளத்தில் தங்கியிருக்குமாறு ABC நிலைக்

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# பொருளியல் 02

நேரம் - 2 மணித்தியாலம்

கடந்தவாரத் தொடர்ச்சி(08.06.2009)...

பகுதி-II

★ பகுதி (அ), பகுதி (ஆ) இருந்து தலா இரு வினாக்களைத் தெரிந்து ஏதாவது 4 வினாவுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி (அ)

1. அ. அண்மிய பணம், ஒதுக்குப் பணம், பிரதிப் பணம் வேறுபடுத்துக.
   ஆ. மத்திய வங்கி அறிக்கையின் படி ஒதுக்குப் பண அளவு 2007ல் அதிகரிப்பை பதிவு செய்தது. அதற்கான பிரதான காரணிகள் எவை?
   இ. கொடுக்கல் வாங்கல் நோக்கம் பணக் கேள்வி, முன்எச்சரிக்கை நோக்கப் பணக் கேள்வி வேறுபடுத்துக.
   ஈ. நிதிச் சந்தையில் பிணையங்களின் விலைகள் அதிகரித்தால் அது பணக்கேள்வியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும்

2. வணிக வங்கித் தொகுதி ஒன்றினது ஐந்தொகை மாதிரி வருமாறு(மில்லியனில்)

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| நடைமுறை வைப்பு | 4000 | காசு ஒதுக்கு | 800 |
| ஏனைய பொறுப்புகள் | 1 000 | மத்தியவங்கி ஒதுக்கு | 100 |
| | | திறைசேரி உண்டியல் | 200 |
| | | கடன்கள் | 3200 |
| | | சொத்துக்கள் | 700 |
| | 5000 | | 5000 |

பொது மக்களிடம் கையிலுள்ள காசு 1500

அ. வங்கி கொண்டுள்ள மிகை ஒதுக்கு 300 ஆயின் மாறும் ஒதுக்கு வீத அளவு யாது?
ஆ. ஒதுக்கு வீதம் மாறா நிலையில் வணிக வங்கிகளின் செயற்பாடுகள் காரணமாக வங்கித் தொகுதியில் குறை அல்லது மிகை ஒதுக்குகள் இல்லை என்க. புதிய நிலையில் வங்கியின் பொறுப்புக்கள், சொத்துக்கள், புதிய பண நிரம்பல் அமைப்பைத் தருக.
இ. வங்கியியல் (நிதியிடல்) நேர்வுகள் எனப்படுபவை யாவை?
ஈ. திருத்திய நாணய சட்டத்துக்கமைய மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்களை குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

3. அ. வர்த்தக மாற்று விகிதம், வர்த்தக நிலுவை வேறுபடுத்துக.
   ஆ. நாடொன்றின் சர்வதேச கொடுக்கல் வாங்கல் தொடர்பான (மில்லியன் ரூபா)

| | |
|---|---|
| காப்புறுதி (தேறியது) | 120 |
| நீண்டகால முதலீடு தேறிய உட்பாய்ச்சல் | 140 |
| குறுங்கால முதலீடு (தேறியது) | 60 |
| வணிக ஏற்றுமதி | 260 |
| வருமான பெறுகைகள் | 50 |
| தனியார் நடப்பு மாற்றல் பெறுகை | 100 |
| வணிக இறக்குமதி | 480 |
| வருமான கொடுப்பனவு | 180 |
| தனியார் நடப்பு மாற்றல் செல்கை | 20 |
| பயணம் (தேறியது) | 200 |

நன்றி: கொழும்பு வணிகவியல் நிலையம்

   1. பண்டம் சேவை வருமான கணக்கு மீதி யாது?
   2. சமூக மீதி யாது?

   இ. பின்வருவனவற்றை சென்மதி நிலுவை பட்டியலில் எத்தலைப்புக்களில் சேர்ப்பீர்?
   1. கிழக்கு நவோதய திட்டத்திற்கு ஈரான் வழங்கிய நன்கொடைகள்
   2. நாடு திரும்பிய பணிப்பெண்களுக்கு மத்திய கிழக்கு நாடுகள் வழங்கிய நட்டஈடு
   3. வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் இலங்கையின் பங்குச் சந்தையில் செய்துள்ள முதலீடு

   ஈ. பின்வருவன நாடொன்றின் தரவுகளாகும்

| ஆண்டு | 2005 | 2007 |
|---|---|---|
| ஏற்றுமதி விலைச் சுட்டி | 120 | 150 |
| இறக்குமதி விலைச் சுட்டி | 160 | 180 |
| ஏற்றுமதி வருமான சுட்டி | 150 | 180 |

   1. வர்த்தக மாற்று வீதத்தை கணித்து அதுபற்றி கூறுக?
   2. ஏற்றுமதியின் இறக்குமதித் திறனை கணித்து அது பற்றி கூறுக.

4. சம ஆற்றலுடைய தலா 1000 வளங்களைக் கொண்ட நேபாளம், வங்காளதேசம் ஆகிய இரு நாடுகள் உண்டெனவும் அவை தளபாடம், ஆயுதம் ஆகிய இரு உற்பத்திகளில் ஈடுபடுவதாகவும் ஒரு அலகு வெளியீட்டை பெற தேவைப்படும் வளங்களின் அளவு வருமாறு எனவும் கொள்க.

| | நேபாளம் | வங்காளதேசம் |
|---|---|---|
| தளபாடம் | 4 | 10 |
| ஆயுதம் | 5 | 20 |

அ. 1. ஒரு அலகு தளபாட உற்பத்திக்கான அமையச்செலவை இரு நாட்டிற்கும் காண்க?
   2. ஒரு அலகு ஆயுத உற்பத்திக்கான அமையச்செலவை இரு நாட்டிற்கும் காண்க?
   3. நேபாளம், வங்காளதேசம் என்பன எந்த உற்பத்திகளுக்கு ஒப்பீட்டு நயமானவை?
   4. ஒவ்வொரு நாடும் மேலும் எந்த உற்பத்தியில் சிறப்படைய வேண்டும்?
   5. நேபாளம் ஒவ்வொர் உற்பத்தியிலும் அரைப் பங்கு வளங்களை ஒதுக்குவதாகவும் வங்காளதேசம் தளபாட உற்பத்தியில் 600 வளங்களையும் ஆயுத உற்பத்தியில் 400 வளங்களையும் ஒதுக்கினால் மொத்த வெளியீட்டாற்றல் யாது. உலக உற்பத்தி மட்டம் யாது.

ஆ. ஒப்பீட்டு நய அடிப்படையிலான சர்வதேச வர்த்தகமொன்றினால் பெறப்படக்கூடிய நன்மைகளை ஆராய்க.

## பகுதி (ஆ)

5. அ. இலங்கையில் நிதியிடை ஏற்பாட்டு நிறுவனங்களின் வகைப்படுத்தலை தருக.
   ஆ. மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை வகைப்படுத்துக.
   இ. கொடுகடன் தரமிடல் என்பதால் விளங்குவது யாது?
   ஈ. வணிக வங்கி ஒன்றின் கடனாக்கத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
   உ. சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பு செலவுகள் யாவை?

6. அ. வெளியக உறுதி, உள்ளக உறுதி வேறுபடுத்துக.
   ஆ. வெளிவாரிச் சமநிலை, உள்வாரிச் சமநிலை வேறுபடுத்துக.
   இ. பொருளாதார உறுதிப்பாட்டுக் கொள்கைகளும் அபிவிருத்திக் கொள்கைகளும் தமக்குள் முரண்பாடான போக்கையுடையவை என்பதால் கருதப்படுவது யாது?
   ஈ. பிள்ளைப்பருவ கைத்தொழில் வாதக் கொள்கை என்பதால் கருதப்படுவது யாது?

7. அ. முழுவறுமை, சார்பு வறுமை, கிராமிய வறுமை, நகரத்து வறுமை வேறுபடுத்துக.
   ஆ. இலங்கையின் வறுமை நிலைவுக்கு பெரிதும் காரணமாவது பிரதேசரீதியான பொருளாதார சமமின்மைகள் என கூறப்படுகின்றது. அந்நிலைமைகள் தோன்றுவதற்கான காரணங்களை வகைப்படுத்துக.
   இ. இலங்கையின் வறுமை மட்டத்தை குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?


8. அ. வறுமைக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சி, பேண்தகு பொருளாதார அபிவிருத்தி வேறுபடுத்துக.
   ஆ. ஒரு நாட்டின் அபிவிருத்தி மட்டங்களை அளவிட பயன்படுகின்ற குறிகாட்டிகளை இனம் காண்க.
   இ. பொருளாதார வளர்ச்சியொன்று அபிவிருத்திக்கு அவசியமானதொன்று ஆயினும் வளர்ச்சியே அபிவிருத்தி ஆகாது விளக்குக.
   ஈ. பொருளாதார வளர்ச்சியொன்றின் நன்மைகள் யாவை?

நிறைவுபெற்றன.

---

குத்துத் தளமொன்றில் உள்ளது. D என்பது ABஇல் AD = 1/3AB ஆகுமாறும் E, F என்பன AE = EF = FC ஆகுமாறு ACஇலும் உள்ள புள்ளிகளாகும். இலேசான நீளா இழையொன்று D ஐயும் F ஐயும் இணைக்கிறது. இழை இறுக்கமாக இருக்க $\angle BAC = 60^{0}$ ஆகும் புள்ளி Eஇல் Wநிறை தொங்க விடப்பட்டுள்ளது. இழையின் இழுவை W/2 எனக்காட்டி, மூட்டு Aஇன் மறுதாக்கத்தின் கிடை, நிலைக்குத்துக் கூறுகளைக் காண்க.

06. a) 2.4m தூரத்திலுள்ள இரு நிலைக்குத்துத் தூண்களின் மீது ஒப்பமாக மூட்டிய இலேசான 5 கோல்களாலான ஒரு சட்டப்படல் நிலைக்குத்துத் தளத்தில் தங்குகிறது. QR கிடையானது $QR = 1.2m$, $QS = 0.6m$, $\angle SQR = 120^{0}$, $\angle SOP = 90^{0}$ ஆகும். Qஇல் 18N தொங்கவிடப்பட்டு உள்ளது. $QRS = 0$ எனின்,
$\tan 0 = \sqrt{3}/5$ என சைன் விதியைப் பயன்படுத்திக் காட்டுக. தகைப்பு வரிப்படம் வரைந்து கோல்கள் QR, SQ இலுள்ள தகைப்புகளைக் காண்க. இழுவை உதைப்பு என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.




b) ஒரு சீரான உருளை ஒரு கிடைத்தளத்தின் மீது தன் அச்சு கிடையாக இருக்க ஓய்விலுள்ளது. ஒரு பலகை அவ்வுருளைக்குக் குறுக்கே ஒரு முனை அத்தளத்தின் மீது கிடக்கும்படி இருக்கிறது. அப்பலகை, அவ்வுருளையின் மீது மட்டுமட்டாக வழுக்கும் நிலையில் உள்ளது. உருளையின் சமநிலையைக்கருதி பலகைக்கும், உருளைக்குமிடையேயான உராய்வுக் கோணம், கிடையுடனான பலகையின் சாய்வின் அரைப்பங்கு எனக்காட்டுக.

07. r ஆரையும் h உயரமும் கொண்ட சீரான திண்ம செவ்வட்டக் கூம்பின் திணிவு மையம், கூம்பின் உச்சியிலிருந்து 3h/4 தூரத்திலுள்ளதெனத் தொகையீட்டு முறையால் காட்டுக. இக்கூம்பு இதே ஆக்கப் பொருளாலானதும் r ஆரையும் l உயரம்கொண்ட சீரான செவ்வட்ட உருளையுடன் அவற்றின் தள முகங்கள் இரண்டும் ஒன்றாகப் பொருந்துமாறு இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட திண்மத்தின் திணிவுமையத்தை கூம்பின் உச்சியிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளதெனக் காண்க.

a) $6 l^{2} \geq h^{2}$ எனின், இத்திண்மமானது உருளையின் வளைபரப்பு ஒரு கிடைத்தளத்தைத் தொட்ட வண்ணம் சமநிலையிலிருக்குமெனக் காட்டுக.

b) $l = h$ எனத் தரப்பட்டிருக்க $r \geq 1/4\, h\sqrt{5}$ எனின், கூம்பின் வளைபரப்பு கிடைத்தளத்தைத் தொட்ட வண்ணம் இத்திண்மம் சமநிலையிலிருக்குமெனக் காட்டுக.
மேலும் இத்திண்மம், வழுக்குதலைத் தடுக்கக்கூடிய போதுமான உராய்வுடைய சாய்தளமொன்றில் உருளையின் தளமுகம் தங்கியிக்குமாறு வைக்கப்பட்டுள்ளது. சாய்தளத்தின் சரிவு $\alpha$ எனின், சமநிலைக்கு $\tan\alpha$ இன் உயர்வுப் பெறுமானத்தைக் காண்க.

08. a) மாதிரி வெளி Sஇல் X, Y இரு நிகழ்ச்சிகள் ஆகும்.
$P(X) = 3/10$, $P(Y) = 5/12$, $P(X/Y) = 2/5$ எனின்,
1. $P(X \cap Y^{1})$
2. $P(X^{1}/Y^{1})$ என்பவற்றைக் கணிக்குக.

b) கணினி ஒன்று சிறுவர்களுக்கான கணக்குகளை பிறப்பிக்கின்றது. சிறுவர்கள் அவ்வினாக்களுக்கான விடைகளை குறித்த நேரத்துள் முடிக்கவேண்டும். முதலாவது வினாவுக்கு சரியாக விடையளிப்பதற்கான நிகழ்தகவு 0.8 ஆகும். வினா ஒன்றிற்கு சரியாக விடையளிக்கும்போது அடுத்து பிறப்பிக்கப்படும் வினா சற்று கடினமானதாக அமையும். இவ்வினாவுக்கு சரியாக விடையளிப்பதற்கான நிகழ்தகவு முன்னைய வினாவின் நிகழ்தகவிலும் 0.1 குறைவானதாகும். வினா ஒன்று சரியாக விடையளிக்கப்படாவிடின், அடுத்த வினாவின் தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. சரியாக விடையளிப்பதற்கான நிகழ்தகவு மாறாது. மாணவன் ஒருவன் இப்போட்டியில் பங்குபற்றுகிறன்
1. இரண்டாவது வினா சரியாக விடையளிக்கப்படுவதற்கு நிகழ்தகவு யாது?
2. மூன்றாம் வினா சரியாக விடையளிக்கப்பட்டதெனத் தரப்படின் இரண்டாம் வினாவிற்கு சரியாக விடையளித்திருப்பதற்குரிய நிகழ்தகவு யாது?

09. இரும்பு வேலை நடைபெறும் இடத்திற்கு சித்திரை மாதத்தில் தினமும் கொண்டுவரப்பட்ட இரும்புத்துண்டுகள் குறித்த நீளங்களைக் கொண்ட துண்டுகளாக வெட்டும்போது வீணாகிய இரும்புத்துண்டுகளின் நீளங்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.
இப்பரம்பலின்

| வகுப்பாயிடையின் நடுப்பெறுமானம் (cm) | 26 | 35 | 44 | 53 | 62 | 71 | 80 | 89 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை (மீடிறன்) | 1 | 2 | 4 | 6 | 8 | 5 | 2 | 2 |

1) இடையம். 2) ஆகாரம்.
3) இடை.
4) மாறத்திறன்.
5) ஓராயக்குணகம் ஆகியவற்றை ஒரு தசமதானத்திற்கு மதிப்பிடுக. இப்பரம்பலின் வடிவம் யாது?

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

நிறைவுபெற்றன.

இவ் வெளியீடு தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் 071-4273035, 0716850005 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30 வரை தொடர்புகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

**15-06-2009 முதல் 21-06-2009 வரை**

**பொ.சந்திரலிங்கம்**



**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.



**இடபம்**

**கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.



**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



**கடகம்**

**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.



**சிம்மம்**

**மகம், பூரம், உத்தரம் 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.



**கன்னி**

**உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.



**துலாம்**

**சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



**விருச்சிகம்**

**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர் உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.



**தனுசு**

**மூலம், பூராடம், உத்தராடம் 1.**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



**மகரம்**

**உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.



**கும்பம்**

**அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



**மீனம்**

**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## வலி. தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்


ஆனைக்கோட்டை, ஜூன்15

சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கமும், மானிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து சமாசம் ஒன்றை உருவாக்கியுள்ளன.

முன்னாள் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வலிகாமம் தென்மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராசா கலந்துகொண்டார்.

இச்சமாசத் தலைவராக ச.செல்வரட்ணம், செயலாளராக ஐ.மார்க்கண்டன், பொருளாளராக த.பத்மநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் செயற்குழு உறுப்பிர்களாக 12பேர் தெரிவு செய்யப்பட்டனர். (203-20)

# யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல்

**2009ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

**(262ஆம் அத்தியாயம்)**

## இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கான பிரத்தியேக அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலுக்காக வேட்புமனுக் கோரி 2009.06.04 ஆம் திகதி வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008ஆம் ஆண்டிற்குரிய யாழ்ப்பாண மாநகர சபை அதிகார எல்லைக்கான தேருநர் இடாப்பில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள, அதேவேளை தற்போது வேறொரு பிரதேசத்தில் வதிவைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு, உரிய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கினைப் பிரயோகிப்பதற்காக செல்ல நியாய பூர்வமான அச்சம் காணப்படுகின்றவிடத்து அவர்கள் தற்போது வதிவைக் கொண்டுள்ள பிரதேசங்களில் அமைக்கப்படுகின்ற வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கினைப் பிரயோகிப்பதற்கான வசதியைக் கோர முடியும்.

இதற்காக குறித்த விண்ணப்பங்களைச் சரியாக நிரப்பி தற்போதய வதிவு முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் மூலம் அத்தாட்சிப்படுத்தி, வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஒருவார காலத்திற்குள் தேர்தல்கள் ஆணையாளருக்கு கிடைக்கத்தக்கவாறு ''தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய'' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்காக மேலும் சந்தர்ப்பமொன்றை வழங்குவதற்காக, விண்ணப்பப்படிவம் கையேற்கப்படும் இறுதித் திகதி 2009.06.26ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதை அறியத் தருவதோடு, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், குருநாகல், அநுராதபுரம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தேர்தல் அலுவலகங்களில், யாழ்ப்பாண மாநகர சபை அதிகார எல்லைக்குரிய தேரு நர் இடாப்பினை பரிசீலிக்க முடியுமெனவும், அவ்விடங்களில் உரிய இடம்பெயர்ந்தவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் முக்கியமாக அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய,
2009.06.15

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்

(சி/559015)






இதனால் சகலருக்கும்
அறியத்தருவது என்னவென்றால்
தரத்தில் சிறந்து உற்பத்தியால் உயர்ந்த லக்கிலாண்ட்
பிஸ்கட் வகைகள் தற்போது யாழ்.நகரில் விற்பனையில்
முன்னணி வகிப்பதால் லக்கிலாண்ட் பிஸ்கட் வகைகட்கு
தட்டுப்பாடு வந்து விடுமோ என்ற அச்சம் உங்களுக்கு வேண்டாம்.
உங்கள் பாவனையின் அதிகரிப்பை கருத்தில் கொண்டு விசேடமாக
தருவித்துள்ளார்கள். சிவாநறுமணப் பூங்கா நிறுவனத்தினர்.
விலையில் எவ்வித மாற்றமும் இல்லை. சுவையிலே நிறை மாற்றங்கள் உண்டு.

1. மழலைகள் மனம் மகிழ லக்கிலாண்ட்
2. விருந்தினர் வியப்புற லக்கிலாண்ட்

தவழுகின்ற குழந்தை முதல் தள்ளாடும் தாத்தாவரை தனிரக சுவைக்கு லக்கிலாண்ட்
தேனீர் வேளையிலும் தெவிட்டாத தெள்ளமுதாய் திகளும் லக்கிலாண்ட் உற்பத்திகள்

**லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில**

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்,நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

*Manufactured By;*
**Luckyland**
*Biscuit Manufactures*
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : **சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்திலான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்.வீரர்கள் இருவர் தங்கம் வென்று சாதனை

## இன்னொரு வீரருக்கு வெண்கலம்!


வாகீசன்


பார்த்தீபன்

வலி. வடக்கு,ஜூன் 15

இலங்கை அமைச்சுர் மெய்வன்மைச் சங்கத்தினால் தேசிய மட்டத்தில் நடைபெற்ற கனிஸ்ட வீரர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்.மாவட்ட வீரர்கள் இருவர் முதலாம் இடத்தையும் ஒருவர் மூன்றாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு வீரர்கள் கலந்து கொண் டனர்.

23 வயதுப் பிரிவினருக்கான தட்டெறிதல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த மா.பார்த்தீப னும்

இதே பிரிவில் குண்டு போடுதல் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.வாகிசனும் தேசிய ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுதங்கப்பதக்கத்தை சுவிகரித்துள்ளனர்.

அத்தோடு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.ரவிக்குமார் தட்டெறிதல் போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார்.

ஏனைய போட்டிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த பாலசங்கர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சதீசன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஹரிகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதே வேளை இந்த வீரர்களில் போக்கு வரத்துச் செலவை சமூகசேவைகள் அமைச்சு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

(4-86)

# 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் 'கோமஸ்' வெற்றிக்கிண்ணத்தை மத்தியகல்லூரி சுவீகரித்தது

வலி.வடக்கு, ஜூன் 15

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி டாக்டர் டபிள்யூ.ஆர்.கோமஸ் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் பாடசாலைகள் 19 வயதுப் பிரிவினருக்கான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி தொடங்கி முடிவடையும் வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காது மோதிக்கொண்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை புள்ளிகளின் அடிப்படையில் பின்தங்கிய போதிலும் சீரான முறையில் தமது திறனை வெளிப்படுத்தி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுக்கொண்டார்கள்.

நான்கு கால பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முறையே 16:08, 13:08, 09:04, 15:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் தொடர்ந்து முன்னிலை பெற்றுக் காணப்பட்டது.

ஆட்டநிறைவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 63:28 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வீழ்த்தி 'கோம்ஸ்' வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆட்டநாயகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரன் திவாகர் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 42:37 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதேவேளை இந்த அணிகள் நான்கும் இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (4-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### தேசியமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

# காலி படெலாக் கல்லூரியைக் காலி செய்தது நெல்லியடி ம.ம.வி

வலி.வடக்கு, ஜூன் 15

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்துடன் இணைந்து தேசியமட்டத்தில் நடத்தும் 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி ஆட்டமொன்றில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு சென்.பெனடிற் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் காலி மாவட்டத்தைச் சேர்ந்த டி.ரி.எஸ்.படெலா கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் மிகவும் முனைப்போடு மோதிக்கொண்டன. இதன் பயனாக இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்தபோது முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் எதிரணியினர் கோல்கள் பெறுவதனை தடுத்து விளையாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீரர்கள், பதிலுக்கு மேலும் இரண்டு கோல்களை அடித்து முன்னிலை பெற்றார்கள்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீரர்களான தனேஷ், அரிகரன் ஆகியோர் முறையே 02, 01 கோல்களை.தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்கள்.

ஆட்ட நிறைவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 03:01 என்ற அடிப் பண்டயில் வெற்றிபெற்றது.

(04-86)

# வலி.வடக்கு பிரதேச செயலக தடகளப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 15

வலி.வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு.

*100 மீற்றர் ஓட்டம்:* ப.மதுசாந் (டயானா வி.க), கு.சோபன், ஜெ.கெரின்ராஜ் (சன்மார்க்க வி.க)

*200 மீற்றர் ஓட்டம்:* சி.அனிஸ்ரன் (கலையொளி வி.க.), கெ.ஜெரின்ராஜ், கெ.டென்சிராஜ் (சன்மார்க்க வி.க)

*400 மீற்றர் ஓட்டம்:* கு.சோபன் (சன்மார்க்க வி.க), சி.அனிஸ்ரன் ( கலை ஒளி வி.க), க.துசிகரன் ( ஞானவைரவர் வி .க)

*800 மீற்றர் ஓட்டம்:* கு.சோபன் (சன்மார்க்க வி.க), செ.அகில்ராஜ் (கலை ஒளி வி.க), தி.கௌதமன் ( ஆபிரகாம் வி.க)

*1500 மீற்றர் ஓட்டம்:* ப.பிரதீபன் (ஞானவைரவர் வி.க.), செ.அகில்ராஜ் (கலை ஒளி வி.க), தி.கஜேந்திரன் (ஞானசாரியார் வி.க)

*5000 மீற்றர் ஓட்டம்:* இ.முகுந்தன் (ஞானவைரவர் வி.க), க.பவிலரசு (கணேசன் வி.க), அ.சயந்தன் (கலை ஒளி வி.க)

*10000மீற்றர் ஓட்டம்:* இ.முகுந்தன் (ஞானவைரவர் வி.க.), க.பவிலரசு (கணேசன் வி.க), அ.சயந்தன் (கலை ஒளி வி.க)

*110 மீற்றர் தடை தாண்டல்:* ம.பார்த்தீபன்(கணேசன் வி.க), சி[illegible]ருமாவளவன் (டயானா வி.க)

*முப்பாய்ச்சல்:* ம.கோகுலதாஸ் (பூமா வி.க), எஸ்.லக்சன்(ஞானவைரவர் வி.க), சி. மயூரன் ( டயானா வி.க)

*குண்டு போடுதல்:* சி.ரதீஸ்வரன் (மல்லாகம் ஆர்.டி.எஸ்), ம.பார்த்தீபன் (கணேசன் வி.க), பு.சந்தோஸ் ( சன்மார்க்கவி.க)

*தட்டெறிதல்:* ம.பார்த்தீபன், ப.நவதீபன் (கணேசன் வி.க.), சி.ரதீஸ்வரன் (மல்லாகம் ஆர்.டி. எஸ்.வி.க.)

*ஈட்டி எறிதல்:* ம.பார்த்தீபன் ( கணேசன் வி.க), கொலின் சாள்ஸ் ஆபிரகாம் வி.க.), பு.சந்தோஷ் (சன்மார்க்க வி.க.)

*உயரம் பாய்தல்:* க.விமேஸ்குமார் (விநாயகர் வி.க.), மு.கிருஸ்ணா (ஞானவைரவர் வி.க.), ஜெ.ஜெனந்தன் (கணேசன் வி.க.),

*நீளம் பாய்தல்:* ம. கோகுலதாஸ் (பூமா வி.க), சி. அனுராகன் (கலை ஒளி வி.க.), மா.யோன் அனிஸ்ரன் (சன்மார்க்க வி.க.)

*கோலூன்றிப் பாய்தல்:* செ.நவநீதன்(விநாயகர் வி.க), க.துசிகரன், தே.மோகுநாத் ( ஞானவைரவர் வி.க),

*4 x 100மீற்றர் அஞ்சலோட்டம்:* மல்லாகம் சன்மார்க்க வி.க. , தெல்லிப்பழை கலைஒளி வி.க, அளவெட்டி விநாயகர் வி.க

*4 x 400 மீற்றர் அஞ்சலோட்டம்:* தெல்லிப்பழை கலைஒளி வி.க, அளவெட்டி ஞானவைரவர் வி.க, மல்லாகம் சன்மார்க்க வி.க

மெய்வல்லுனர் போட்டிகளில் 1ஆம் இடத்தை ஞானவைரவர் வி.க (32 புள்ளிகள்), 2ஆம் இடத்தை மல்லாகம் சன்மார்க்க வி.க, தெல்லிப்பழை கலை ஒளி வி.க தலா 31 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன.

(86)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 15

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை, புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் கலந்துகொள்வார்.

(203-207)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் விளையாட்டு அவையும் யாழ்.மாவட்ட ஹொக்கி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய லீக் முறையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஹொக்கி அணியும், யாழ்.ஸ்ரார் அணியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட விழிப்புணர்வு பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்ற வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்ட நிகழ்வில் வைத்துப் பரிசில்கள் வழங்கப் பட்டன.

முதலிடம் பெற்ற ஊரெழு கணேசா வித்தியாசாலை மாணவி நீ.சுகன்ஜாவிற்கு யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் பரிசில் வழங்குவதையும், 2ஆம் இடத்தைப் பெற்ற ஊரெழு கணேசா வித்தியாசாலை மாணவி வீ.யசீனாவிற்கு மார்பு நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் சி.யமுனானந்தா பரிசில் வழங்குவதையும், 3ஆம் இடத்தைப் பெற்ற ஊரெழு கணேசா வித்தியா சாலை மாணவி தி.தபோசிகாவிற்கு கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: குமரசிறி)*

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும்
செல்வி பஞ்சலிங்கம் பேமானந்தி
அவர்களின் அன்புத் தந்தை

**இளையதம்பி பஞ்சலிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

(சி/559022)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கோபாலசுந்தரம் திருத்தணிகாசலம்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (Ceylon Workers Congress)

தோற்றம்: 30★11★1934 மறைவு: 15★06★1999

திதி: 24.06.2009

மனிதர்குல மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து பொன்னம்பலவாணரடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவு மாறவே மாறாது
உங்கள் நினைவுடனேயே நாம் இப்பூவுலகில் வாழ்கிறோம்

*பிரிவால் துயருறும்:*
சந்தை வீதி, உடுப்பிட்டி. (86215) குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கணபதிப்பிள்ளை செல்லத்துரை**

தோற்றம் 27★05★1927
மறைவு 29★05★2005

பாசமும் பரிவும் காட்டிய
பண்பின் சிகரமே!
நேசத்துடன் வாழ்ந்து மறைந்துவிட்டீர்
உமது பிரிவைத் தாங்கொணா நாம்
துவண்டு கலங்கிப் போனோமே

*என்றும் நினைவுடன்*
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

*கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.* (86222)

## ஆனந்தி திருமண சேவை

1984 இல் பிறந்த, உதயச் செவ்வாயுடைய, 41 3/4 கிரகபாவம் பூராட நட்சத்திரம், 1ஆம் பாதம் உயரம் 5'5'' B.Sc பொறியியலாளர் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பெண்மணிக்கு உள்ளூர் அல்லது வெளியூர் மணமகன் தேவை. சகோதரர் மருத்துவக் கல்வி இறுதியாண்டு கற்பதனால் மாற்று சம்பந்தமும் செய்யலாம். M.Sc. கற்பதற்கு பெண்மணி அண்மையில் லண்டனுக்குச் செல்லவிருக்கின்றார். நேரடியாக அல்லது தபால் மூலம் அல்லது T.P 021 222 8708 மூலமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: V.A. சிவராசா சோதிடர்
56, அம்மன் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும்பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்குசெய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு
*நன்றி.*

ஓர் அடியான்

## தவறிவிட்டது

உயரப்புலம், ஆனைக்கோட்டை என்னும் முகவரியுடைய பாலசுப்பிரமணியம் பிரபாகரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை(833083767V), விசேட அடையாள அட்டை (0905013124), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 09.06.2009 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது 0776914100, 0776555757 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை வலி.மேற்கு சங்கானை பிரிவு வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், மோட்டார் சைக்கிள் திருத்துதல் ஆகிய தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கு தகுதி யானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன் 18 தொடக்கம் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் இருத்தல்வேண்டும். பயிற்சி நெறி 6 மாதகாலம் இடம்பெறும்.

பயிற்சி வகுப்பில் இணையவிரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், வட்டுக் கோட்டை வீதி, சித்தங்கேணி என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.சிறீகுகன் அறிவித்துள்ளார். (203-100)

## கைதடியில் கெயர் திட்டம் முன்னெடுப்பு

எதிர்கால முன்னேற்றத்துக்கான சமூக முன்னெடுப்புத் திட்டம் - 2 இன் கீழ் கெயர் நிறுவனத்துக்கும் சமூக முன்னெடுத்தல் குழுக்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த ஐந்தாம் திகதி கைதடி கமநல சேவைகள் திணைக்கள மண்டபத்திலே நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், கெயர் நிறுவன அலுவலர்கள் மற்றும் சமூக முன்னெடுத்தல் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (1-288)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில. By: விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (86220)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



வடமாகாண பிரதம செயலாளர்
திருமிகு ஆறுமுகசுவாமி சிவசுவாமி



யாழ்ப்பாண மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர்
திருமதி ரூபினி வரதலிங்கம்

மக்கள் சேவைதான் மகேசன் சேவையென
அரச சேவைகளை அர்ப்பணிப்புடன் ஆற்றி
பதவியுயர்வுதனை பக்குவமாய் ஏற்ற
நல் இதயங்களே பல்லாண்டு வாழ்க.

நலன்புரிச்சங்கம், பிரதேச செயலாளரும், அனைத்து
வலி.தெற்கு, உடுவில். (86188) உத்தியோகத்தர்களும்.

## யா/இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

காலம் : 28.06.2009 ஞாயிறு மு.ப. 9 மணி

இடம் : கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபம் ,

தலைவர்: திரு. அ.சதானந்தன் *(கல்லூரி முதல்வர்)*

பழைய மாணவர்கள் தங்களது உறுப்புரிமையைப் புதுப்பித்துக் கொண்டு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

புதிய அங்கத்தவர்கள் உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

* குறிப்பு : பிரேரணைகள் இருப்பின் 21.06.2009ற்கு முன் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
* புதிய நிர்வாகக் குழுத் தெரிவு இடம்பெறும்.

(86202) அதிபர்.

## மரண அறிவித்தல்

### சுந்தரமூர்த்தி விஜயலட்சுமி



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், அராலி மேற்கு, வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி விஜயலட்சுமி நேற்று (14.06.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சுகிர்தலட்சுமி, புஸ்பராணி, கார்த்திகேசு, கமலராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுவேந்திரன் (சிறிறங்கன் என்ரபிறைஸ்), விஜேந்திரன், ரவீந்திரன் (பிரான்ஸ்), கலைச்செல்வி (ஜேர்மனி), கஜேந்திரன் (சங்கானை ப.நோ.கூ.சங்கம்), நவீந்திரன் (லக்சுமி ஸ்ரோர்ஸ்), பரிமளா ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராணி, அன்பழகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் கஜானிகா, அயூன் (ஜேர்மனி), கம்சிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.06.2009) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (86281)
தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் அஹ்மதி நிஜாத் மீண்டும் வெற்றி

## எதிரணியினர் வீதிகளில் ஆர்ப்பாட்டம்



தெஹ்ரான், ஜூன் 15

ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட்ட அஹ்மதி நிஜாத் வெற்றி பெற்றார். இத்தேர்தல் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வாக்குகள் சனிக்கிழமை எண்ணப்பட்டன. எண்ணிக்கையில் ஆரம்பத்திலிருந்தே அஹ்மதி நிஜாத் முன்னணியில் இருந்து வந்தார்.

வாக்கு எண்ணிக்கை முடிவில் அஹ்மதி நிஜாத், 65 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை ஈட்டி அமோக வெற்றி பெற்றார். இத்தேர்தலில், அஹ்மதி நிஜாத் உட்பட நான்கு வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். 4 கோடியே 60 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர்.

இத்தேர்தலில் 80 சதவீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. தேர்தலில் அஹ்மதிநிஜாத்துக்கும், மிதவாதியான முன்னாள் பிரதமர் மிர் ஹௌசின் மௌலவிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. மௌலவி 32 சதவீத வாக்குகளை மட்டுமே ஈட்டலானார்.

மற்றுமிரு வேட்பாளர்களும் சொற்ப எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று படுதோல்வியடைந்தார்கள். வாக்கு எண்ணிக்கை முடிவில், அஹ்மதிநிஜாத்தின் வெற்றியை தேர்தல் ஆணையத் தலைவர் கம்ரன் தனேஷ்ஜூ அதிகாரபூர்வமாக அறிவித்தார். இது ஈரானிய இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் இடம்பெற்ற 10 ஆவது ஜனாதிபதி தேர்தலாகும்.

வாக்கு எண்ணிக்கையில் அஹ்மதிநிஜாத் முன்னணி வகிக்கின்றார் என்ற செய்தி பரவியது முதல், அவரது ஆதரவாளர்கள் தேசிய கொடிகளுடன் வீதிகளில் திரண்டார்கள். அவர்கள் அஹ்மதிநிஜாத்துக்கு ஆதரவாக வாழ்த்துக் கோஷங்களை முழங்கினர். குதூகலம் கொண்டாடினர்.

முடிவுகள் முழுமையாக வெளியானதும் எதிரணியினர், வாக்களிப்பில் ஊழல்களும், மோசடிகளும் இடம்பெற்றுள்ளன என குற்றஞ்சாட்டினர். அத்துடன் ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். வன்முறைகளிலும் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தெஹ்ரான் வீதிகளில் போடப்பட்டிருந்த தடைகளை அகற்றினார்கள். ஆங்காங்கு டயர்களைப் போட்டு எரித்தார்கள். இதனால், பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. பொலிஸார் தடியடி நடத்தியும் கண்ணீர்க்குண்டுப் பிரயோகம் செய்தும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

ஹௌசின் மௌலவியின் பிரசாரத்தின்போது பச்சை வர்ணம் பயன்படுத்தப்பட்டது. அவரின் ஆதரவாளர்கள் பச்சை நிற உடை யணிந்து, தெஹ்ரான் வீதிகளில், தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். "சர்வாதிகாரியே பதவி விலகு" என அவர்கள் கோஷமிட்டார்கள். உள்துறை அமைச்சகத்துக்கருகில், நான்கு பொலிஸ் மோட்டார் சைக்கிள்கள் எரிக்கப்பட்டன என செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

இத்தேர்தல் குறித்து தோல்வியுற்ற முன்னாள் பிரதமர் ஹௌசின் மௌலவி குறிப்பிடுகையில்," இத்தேர்தலில் ஏராளமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. பெருந்தொகையான வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. பல இடங்களில் வாக்குச் சீட்டுகள் தீர்ந்து போய்விட்டன. அதனால் பலர் வாக்களிக்கவில்லை" என்றார்.

அஹ்மதிநிஜாத், தமது வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்ட பின்னர், நாட்டு மக்களுக்குத் தேசிய தொலைக்காட்சியில் உரையாற்றினார். அவர் தம் உரையில், "பின்னோக்கிச் செல்வதைத் தவிர்த்து, முன்னோக்கிச் செல்லவேண்டிய இலக்கையே ஈரானிய மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன்" என்றார்.

## பாராசூட்டிலிருந்து குதித்து பிறந்தநாள் கொண்டாடினார் புஷ்!

வாஷிங்டன், ஜூன் 15

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ், தமது 85 ஆவது பிறந்தநாளை பாராசூட்டிலிருந்து கீழே குதித்து கொண்டாடினார். இவர் சமீபத்திய முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷின் தந்தையாவார்.

மைனே நகரிலுள்ள தமது இல்லத்துக்கு அருகே, 10 ஆயிரத்து 500 அடி உயரத்திலிருந்து விமானத்திலிருந்து பாராசூட்டில் கீழே குதித்து இவர் தம் பிறந்தநாளைக் கொண்டாடினார்.

இவரது சாகஸத்தை புதல்வர்களான முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், ஜெப் புஷ், மனைவி பார்பரா ஆகியோர் கண்டு ரசித்தனர்.

ஜோர்ஜ் எச். டபிள்யூ.புஷ் தமது 75 ஆவது பிறந்தநாளையும், அதேபோல் 80 ஆவது பிறந்த நாளையும் பாராசூட்டிலிருந்து குதித்தே கொண்டாடியுள்ளார். இதுபோல தமது 90 ஆவது பிறந்த நாளையும் தாம் கொண்டாடவுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உலக அரங்கில்

# ஈரானில் தொடர் வன்முறைகள் நூற்றுக்கு மேற்பட்டோர் கைது

தெஹ்ரான், ஜூன் 15

ஈரானில் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக, ஈரானிய சீர்திருத்தவாதிகள் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

தேர்தலில் தோல்வியுற்ற மிதவாதியான மிர் ஹௌசின் மௌலவி வன்முறையைத் தவிர்க்குமாறு தம் ஆதரவாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதை உதாசீனப்படுத்திவிட்டு, அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

வன்முறைகளைத் தூண்டிவிட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். சனிக்கிழமை இரவிரவாக தேடுதல் நடத்தப்பட்டு, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரால் முன்னாள் ஜனாதிபதி மொஹம்மத் கதாமியின் சகோதரரும், முன்னாள் அரச பேச்சாளரும், நாடாளுமன்ற முன்னாள் பிரதி சபாநாயகருமான முக்கிய அரசியல் பிரமுகரொருவரும் இதர சீர்திருத்த அமைப்புகளைச் சேர்ந்தோரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் வட்டாரம் மேலும் தெரிவித்தது.

# பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்: 7 பேர் உயிரிழப்பு; 50 பேர் காயம்

இஸ்லாமாபாத், ஜூன் 15

வட-மேற்கு பாகிஸ்தானின் டேரா இஸ்மாயில்கான் நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என அரச அதிகாரி செயித் மொஹ்சின் ஷா, ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

டேரா இஸ்மாயில்கான் நகரில் பெப்ரவரியிலும் பாரிய குண்டுத் தாக்குதலொன்று இடம்பெற்றுள்ளது. இதில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 75 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதே நகரில் ஜனவரியிலும் குண்டுத் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதில் ஐந்து பேர் பலியாகியுள்ளனர். எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டு முதல் உள்ளூர் ஷியா மக்களை இலக்கு வைத்து இந் நகரில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பிராந்தியத்தில்தான் பாகிஸ்தான் தலிபான் தலைவர் பெய்துல்லா மெஹ்சூட் தலைமறைவாக இருந்து வருகிறார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானில் சமீபத்தில் இடம்பெற்றுள்ள தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு இந்த தலிபான் அமைப்பே உரிமை கோரியுள்ளது என இஸ்லாமாபாத்திலுள்ள பி.பி.ஸி. நிருபர் மிக்கி ஆல்ரிஜ் தெரிவிக்கின்றார்.

# தலிபான்களின் குரூர நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி கடும் கண்டனம்

இஸ்லாமாபாத், ஜூன் 15

தலிபான்களுக்கு எதிரான மதகுரு சர்பிராஸ் நேமி, தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டமைக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி அஸிப் அலி சர்தாரி, சனிக்கிழமை இரவு தாம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் கடும் கண்டனம் தெரிவித்தார்.

"தலிபான்கள் மிலேச்சத்தனமானவர்கள். பாகிஸ்தானின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, கட்டுக்கோப்பு, [illegible]ங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஆகிய[illegible]ற்கு எதிராக அவர்கள் செயற்படுகிறார்க[illegible] இதை பாகிஸ்தான் மண்ணில் அனுமதிக்க [illegible]யாது" என்றும் அவர் தெரிவித்துக்கொண்டா[illegible].

"எங்களுடைய இறையாண்மைக்காக நாம் போரிட்டு வருகின்றோம். முடிவு எட்டப்படும் வரை இதனை நாம் தொடர்வோம். சோதனைகளை முறியடித்து இதில் நாமே வெற்றி பெறுவோம். இது பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு போராகும். குரூரமானவர்களுக்கு எதிராக, திடத்துடன் இச் சண்டையை முன்னெடுத்துச் செல்லும் எமது இராணுவச் சிப்பாய்கள் பாராட்டுதற்குரியவர்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இச்சண்டையில் ஈடுபட்டுள்ள சிப்பாய்கள், தங்களின் மாத வேதனத்திற்குச் சமமான மேலதிக கொடுப்பனவுகளையும் உடனடியாகப் பெறுவார்கள். இந்த மேலதிக கொடுப்பனவுகள் ஏனைய சிப்பாய்களுக்கு, அடுத்த ஜனவரியில் வழங்கப்படும். இதர அரச அதிகாரிகளின் வேதனங்களும் அதிகரிக்கப்படும்" என்றும் ஜனாதிபதி சர்தாரி தெரிவித்தார்.

"தலிபான்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள இச்சண்டையையொட்டி, 20 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். இவர்கள் மீள குடியமர்த்தப்படுவார்கள். அத்துடன் எல்லைப் பிராந்தியங்களைச் சேர்ந்த இவர்களுக்கு நிரந்தர காத்திரமான பாதுகாப்பும் அளிக்கப்படும்" என்றும் அவர் கூறினார்.

# ஸ்பானிய சிவில் யுத்தகால பாரிய புதைகுழிகள் அகழ்வு

## 7 உடல்களின் எச்சங்கள் முதற்கட்டத்தில் மீட்பு

மெட்ரிட், ஜூன் 15

ஸ்பானிய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க, ஸ்பானிய சிவில் யுத்தகால புதைகுழிகளைத் தோண்டும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இவை 70 வருடகால பழைமையானவை. இரு பாரிய புதைகுழிகளிலிருந்து முதல்கட்டமாக 7 உடல்களின் எச்சங்கள் மீட்கப்பட்டு, மருத்துவ ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

சாண்டா மார்ட்டா கிராமத்துக்கருகிலுள்ள இரு பாரிய புதைகுழிகள், ஐந்து தினங்களாக உறவினர்களின் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக தோண்டப்பட்டன. இதற்கு முன்னரும் நீதி விசாரணைக்காகப் புதைகுழிகள் தொண்டு அமைப்புகளால் தோண்டப்பட்டுள்ளன. எனினும், உத்தியோகபூர்வ உதவி அவற்றிற்குக் கிடைக்கவில்லை.

1936 ஆம் ஆண்டு, ஜெனரல் பிரான்ஸிஸ்கோ பிராங்கோவின் ஆட்சிக்காலத்தில் ஸ்பானியாவில் சிவில் யுத்தம் மூண்டது. யுத்த காலத்தில் ஜெனரலின் ஆதரவாளர்களால் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காணமற் போய்விட்டனர்.

"ஜெனரல் பிராங்கோ ஆட்சியில் ஆயிரக்கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிவில் யுத்த காலத்தில் மக்கள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளார்கள்" என வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

சிவில் யுத்தகால படுகொலைகள் தொடர்பான விசாரணையை ஸ்பானிய உச்ச நீதிமன்றம் மேற்கொண்டுள்ளது. உச்ச நீதிமன்ற நீதிவான் பால்தசார் கார்ஷன் சிவில் யுத்தகால புதைகுழிகளை தோண்டுவதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். ஸ்பானிய கவிஞர் பெட்ரிகோ லார்கோ புதைக்கப்பட்ட இடமென கருதப்படும் இடத்திலிருந்து அகழ்வுப்பணி ஆரம்பமாகியுள்ளது.

மனித இனத்துக்கு எதிரான இந்த குரூர படுகொலைகளுக்கு, ஜெனரல் பிராங்கோவும், அவரது இராணுவத்தைச் சேர்ந்த முப்பதுக்கு மேற்பட்ட உறுப்பினர்களுமே தூண்டுதல் அளித்து வந்துள்ளார்கள் என உச்ச நீதிமன்ற நீதிவான் கார்ஷன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றிய சிரேஷ்ட அதிகாரி ஹிஸ்புல்லா எம்.பியுடன் முதல் சந்திப்பு

பெய்ரூத், ஜூன் 15

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரக் கொள்கைக்கான தலைவர் சேவிர் சொலானா, லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா இயக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஹுஸைன் ஹாஜ் ஹஸனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஐரோப்பிய ஒன்றிய சிரேஷ்ட அதிகாரியொருவர் ஹிஸ்புல்லா அரசியல்வாதி ஒருவரைச் சந்தித்து கலந்துரையாடியமை இதுவே முதல் தடவையாகும். இச்சந்திப்பு தலைநகரான பெய்ரூத்திலுள்ள லெபனான் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றது.

சமீபத்தில் நடைபெற்ற லெபனான் நாடாளுமன்றத் தேர்தலில், மேற்கத்தேய நாடுகளின் ஆதரவைப் பெற்ற ஆளும் கூட்டணி வெற்றி பெற்றது. ஈரான், சிரியா ஆகிய நாடுகளின் அனுசரணையை ஈட்டியுள்ள ஹிஸ்புல்லா கூட்டணி தோல்வியுற்றது.

எனினும், லெபனான் நாடாளுமன்றத்தில் ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கத்தின் 11 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களில் ஹுஸைன் ஹாஜ் ஹஸனும் ஒருவர். அமெரிக்கா இந்த இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக [illegible].

[illegible] இயக்கம் லெபனானில் வலிமை பொருந்திய ஓர் இராணுவ சக்தியாகவும் திகழ்கிறது. அரசியல், பொருளாதாரம், அபிவிருத்தி, கல்வி, இஸ்லாம் ஆகியவை உட்பட இன்னும் பல துறைகளிலும் ஹிஸ்புல்லாவின் பங்கு, பணிகள் பரவியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை ஹிஸ்புல்லா இயக்கத்துடனான தொடர்புகளை துண்டித்தே வந்துள்ளது. அத்துடன் லெபனானில் இயங்கும் ஓர் இயக்கமாகக் கூட இதனை அங்கீகரிக்க ஒன்றியம் முன்வரவில்லை. ஹிஸ்புல்லாவுடனான பேச்சுகளையும் தவிர்த்தே வந்துள்ளது.

ஹிஸ்புல்லா எம்.பியுடன் தாம் கலந்துரையாடிய பின்னர், ஐரோப்பிய ஒன்றிய சிரேஷ்ட அதிகாரி சேவிர் சொலானா கூட்டுப்பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசினார். அவர் தம் உரையில், "லெபனானின் அரசியல் வாழ்க்கையில், ஹிஸ்புல்லாவும் ஓர் அங்கம். அதுவும் தம் மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிறது" என்றார்.

ஹாஜ் ஹுஸைன் பேசுகையில்," ஐரோப்பிய ஒன்றியம் ஹிஸ்புல்லாவையும் தனது கருத்தில் கொள்ளத் தொடங்கியுள்ளது. அதற்கான அறிகுறியே இந்தச் சந்திப்பாகும்" என்றார். "ஹிஸ்புல்லாவைப் பற்றி தெரிந்துகொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது. இதனை நான் வரவேற்கின்றேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அமெரிக்கக் கல்வி முறைமை மேம்படுத்தப்பட வேண்டும்

## ஒபாமா அறிவிப்பு

சிக்காக்கோ, ஜூன் 15

"இந்திய, சீன மாணவர்களுடனான போட்டியை சமாளிக்க வேண்டுமானால், அமெரிக்காவின் கல்வி முறைமை மேம்படுத்தப்பட வேண்டும்" என விஸ்காஸினில் நடைபெற்ற கூட்டமொன்றில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்திய, சீன மாணவர்கள் கல்வி நிறுவனங்களில்தான் அதிக நேரத்தைச் செலவழிக்கின்றனர். அவர்கள் வீடியோ கேம் விளையாடுவதில் குறைவான நேரத்தையே செலவழிக்கின்றனர். இதனால், இரு நாட்டு மாணவர்களாலும் உலகப் போட்டியை சமாளிக்கும் அளவுக்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள முடிகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அமெரிக்க மாணவர்கள் அப்படியல்ல. கல்வி நிறுவனங்களில் குறைவான நேரத்தைச் செலவழித்து, வீடியோ கேம் விளையாடுவதில் அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் அவர்களால் உலகப் போட்டிக்கு ஏற்ப தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள இயலவில்லை" என்றும் ஒபாமா தெரிவித்தார்.

"உலகம் கடும் போட்டிக்களமாக மாறி வருகிறது. இந்தியர்களும், சீனர்களும் வேலை தேடி அமெரிக்காவுக்கு வரவேண்டிய நெருக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். இதனால், தங்களது திறமையை மேம்படுத்திக் கொள்ளவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது" எனக் கூறிய அவர் அமெரிக்க [illegible] தமது அரசு அதிகமான [illegible] என்றும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு சம உரிமை பெற்றுக்கொடுக்க இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தும்



சத்தியமூர்த்தி பவனுக்கு வந்த ப.சிதம்பரத்துக்கு வரவேற்பு அளிக்கப்பட்டபோது....

## மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் உறுதி

சென்னை, ஜூன் 15

இலங்கைத் தமிழர்களை மீண்டும் அவர்களது இருப்பிடங்களில் குடியமர்த்துவது, சம வுரிமை அளிப்பது உள்ளிட்ட உறுதிமொழிகளை மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து இந்தியா வலியுறுத்தும் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

நேற்றுமுன்தினம் சென்னை சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

மத்திய அரசில் நிலையான அதே நேரத்தில் வலிமையான ஆட்சி அமைந்திருக்கிறது. இத்தகைய ஆட்சி அமைந்திருப்பதற்கு இந்திய மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். குறிப்பாக தமிழ் நாட்டில் தேர்தல் நேரத்தில் வெவ்வேறு கணிப்புகள் வந்தபோதும், இறுதியில் காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைவதைத்தான் நாங்கள் விரும்புகிறோம் என்று தெளிவான முடிவு எடுத்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி.

அடுத்த 5 ஆண்டுகளில் செய்ய வேண்டியதை ஜனாதிபதி உரையில் கூறியிருக்கிறார். முதல் 100 நாள்களில் செய்ய வேண்டியதைத் செய்து விடுவோம்.

பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடுக்கு பாரதிய ஜனதாக் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தச் சட்டம் நிறைவேறும் என்று மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறோம்.

தமிழகத்தில் ஆட்சியில் காங்கிரஸ் பங்கேற்பது பற்றி நான் கருத்துச் சொல்ல முடியாது.

இலங்கை ஜனாதிபதி தனது வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்று இன்றுவரை நம்புகிறோம். அதை நிறைவேற்றத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். நாம் மட்டுமல்ல, உலக நாடுகள் பல வற்புறுத்துகிறது.

அந்த வாக்குறுதியை மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றுகிறாரா? இல்லையா என்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்திய அரசு தன் முழு செல்வாக்கை பயன்படுத்தி உலக நாடுகளுடன் சேர்ந்து வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி, இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதுதான் எங்கள் இலட்சியம்.

கர்நாடக மாநிலத்தில் காணாமல்போன தமிழக விஞ்ஞானி மகாலிங்கம் எந்த சூழ்நிலையில் காணாமல் போனார் என்று தெரியாது. அனைத்து உளவு அமைப்புகளும் அவரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவரது குடும்பத்தினரும் அவரைப் பற்றிய தகவல்களை பரிமாறிக் கொள்ள வேண்டும் - என்றார்.

# இந்தியக் கடற்படைக்கு மேலும் 400 விமானங்கள்



பயிற்சி முடித்த விமானிகள்....

அரக்கோணம், ஜூன் 15

இந்தியக் கடற்படைக்கு வெளிநாடுகளில் இருந்து மேலும் 400 விமானங்கள் வாங்கப்படவுள்ளன - என்று இந்தியக் கடற்படையின் விமானப்பிரிவுத் தலைவர் ரியர் அட்மிரல் சுதீர் பிள்ளை தெரிவித்தார்.

அரக்கோணத்தில் உள்ள ஐ.என்.எஸ் ராஜாளி கடற்படை விமானத் தளத்தில் உள்ள ஹெலிக்கொப்டர்கள் விமானப் பயிற்சி பாடசாலையில் பயிற்சி முடித்த விமானிகளின் 72 ஆவது பிரிவிற்கான பயிற்சி நிறைவு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அப்போது செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்தியக் கடற்படைக்கு இப்போது பாதுகாப்புத் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இதை கருத்தில் கொண்டு அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளிடம் இருந்து இந்தியக் கடற்படையின் தேவைக்காக 400 போர் விமானங்களை வாங்கவுள்ளோம் - என்றார்.

# தமிழக ஆட்சியில் காங்கிரஸுக்கு பங்கு வழங்க தி.மு.க. முடிவா?

சென்னை, ஜூன் 15

தமிழக ஆட்சியில் பங்கு கேட்பது குறித்து காங்கிரஸ் மேலிடம் உறுதியாக இருக்கிறது எனவும், இதையடுத்து காங்கிரஸ் கட்சியில் முக்கியமான சிலருக்கு அமைச்சர் பதவி அளிக்க தி.மு.க. இறங்கி வந்திருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

இதற்கு ஏதுவாக தி.மு.கவில் சில அமைச்சர்களின் பதவிகள் பறிக்கப்படும் என்றும் பதவிகள் மாற்றப்படும் என்றும் கூறப்படுகிறது.

தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சிக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுப்பப்பட்டு, அது தற்போது வலுவடைந்துள்ளது. இதுகுறித்து விவாதிக்க சென்னையில் நேற்று நடக்கவிருந்த காங்கிரஸ் எம்.எல். ஏக்கள் கூட்டம் திடீரென ரத்து செய்யப்பட்டது.


எம்.எல்.ஏக்கள் கூடி விவாதிப்பதற்கு பதிலாக, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, சட்டசபை காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் உள்ளிட்டோர் டில்லிக்கு அழைக்கப்பட்டு அது பற்றி விவாதிக்கப்பட உள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் அரசியல் ஆலோசகர் அகமது படேல், தமிழ்நாடு காங்கிரஸுக்குப் பொறுப்பு வகிக்கும் மேலிட பார்வையாளர் குலாம்நபி ஆசாத் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என தெரிகிறது.

தமிழக அரசில் பங்கு கேட்க காங்கிரஸ் மேலிடமும் தற்போது விரும்புகிறது எனவும், அதுபற்றி ஆலோசனை நடத்தி தி.மு.க. தலைமைக்குத் தெரிவிப்பது என்றும் முடிவு செய்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

மத்திய அரசில் 7 அமைச்சர்களை பெற்றுள்ள தி.மு.கவும், காங்கிரஸுக்கு தமிழக அமைச்சரவையில் பங்கு கொடுக்க முடிவு செய்து தனது நிலையிலிருந்து இறங்கி வந்திருக்கிறது எனத் தெரிகிறது.

தி.மு.க. அரசுக்கு மிகவும் இணக்கமாக செயற்படும் காங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் டி.சுதர்சனம், கொரடா பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட முக்கிய சில எம்.எல்.ஏக்களுக்கு அமைச்சர் பதவியளிக்க தி.மு.க. மேலிடம் முன்வந்துள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.




# ஈழ அகதிகளின் பிள்ளைகளின் படிப்புச் செலவை ஏற்றார் சூர்யா

## 50 மீனவக் குழந்தைகளையும் தத்தெடுத்தார்



சென்னை, ஜூன் 15

மீனவக் குழந்தைகள் ஐம்பது பேரைப் படிக்க வைக்க நடிகர் சூர்யா தத்தெடுத்துள்ளார். மேலும், தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஈழத் தமிழர் அகதிகளின் பிள்ளைகளை படிக்க வைக்கும் பொறுப்பையும் அவர் ஏற்றார்.

சிவகுமார் கல்வி அறக்கட்டளையின் 30ஆம் ஆண்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

பிளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 30 மாணவ, மாணவிகளுக்கு தலா 10 ஆயிரம் வீதம் ரூபா 3 இலட்சமும், கல்விக்காக இயங்கும் அமைப்புகளுக்கு ரூபா 6 இலட்சமும், சிவகுமார் வழங்கினார். லிட்டில் பிளவர் பாடசாலையில் பிளஸ் 2இல் அதிக மதிப்பெண் பெற்ற, 3 மாணவிகளுக்கு தலா ரூபா 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

இதேவிழாவில் சூர்யா நடத்தி வரும் அகரம் அமைப்பு சார்பில், ஈஷா வித்யா பாடசாலையிலிருந்து 50 மீனவக் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

இதேவேளை, தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஈழத் தமிழர் அகதிகளின் பிள்ளைகளை படிக்க வைக்கும் பொறுப்பையும் அகரம் ஏற்றது.

அகரம் கல்வி அறக்கட்டளை ஆண்டுக்கு ரூபா 25 இலட்சம் கல்வி உதவி வழங்கி வருகிறது. 100 கிராமப்புற மாணவர்களைத் தேர்வு செய்து உதவித் தொகையோடு வாழ்க்கை வழிகாட்டும் பயிற்சிகளும் அளிக்கிறோம் - என்றார் சூர்யா.

விழாவில் கார்த்தி, பிருந்தா, சிவகுமார் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்தினர்.

# மம்முட்டி-மோகன்லாலின் 'ருவென்ரி - 20' தமிழில்..!



மலையாளத்தில் பல கதாநாயகர்கள் இணைந்து நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த 'ருவென்ரி - 20' என்ற படம் தமிழில் 'இருபதுக்கு இருபது' என்ற பெயரில் தயாரிக்கப்படுகிறது. இதில் பல கதாநாயகர்கள் இணைந்து நடிக்கிறார்கள்.

மலையாள நடிகர் - நடிகைகள் சங்க வளர்ச்சி நிதிக்காகத் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தில் மம்முட்டி, மோகன்லால், திலீப், சுரேஷ்கோபி, ஜெயராம், முகேஷ், சீனிவாசன், நயன்தாரா, கோபிகா, பாவனா, காவ்யா மாதவன் உட்பட பல முன்னணி நடிகர் - நடிகைகள் இணைந்து நடித்திருந்தார்கள்.

படத்தை ஜோஷி இயக்கியிருந்தார். நகரில், கல்லூரி மாணவர் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்படுகிறார். அவரைக் கொலை செய்தது யார்?, கொலைக்கான காரணம் என்ன என்பதைச் சித்தரிக்கும் கதையம்சம் கொண்டது இப்படம். மலையாளப் பட வரலாற்றிலேயே மிகப்பெரிய வசூல் சாதனை செய்து, இந்தப் படம் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரேநாளில் 3 லட்சம் டி.வி.டிகள் விற்று, டி.வி.டி. விற்பனையிலும் சாதனை படைத்தது.

தமிழில் இதுபோன்று பல கதாநாயகர்கள் இணைந்து நடிக்கும் படம் வராதா என்ற ரசிகர்களின் நீண்ட கால கனவு நிறைவேறும் நாள், இப்போது நெருங்கி வந்து இருக்கிறது.

'ருவென்ரி - 20' படத்தை தமிழில் தயாரிக்கும் உரிமையை பெறுவதில், தமிழ்ப் பட அதிபர்கள் மத்தியில் பலத்த போட்டி இருந்தது.

இந்தப் போட்டியில், கிளாசிக் கிரியேட்டர்ஸ் என்ற பட நிறுவனம் வெற்றிபெற்றிருக்கிறது.

தமிழில் தயாராகும் படத்துக்கு, 'இருபதுக்கு இருபது' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இந்தப் படத்தில் நடிக்கும் நடிகர் - நடிகைகள், படத்தை இயக்கப்போகும் இயக்குநர் யார் - யார் என்பதை அடுத்த மாத இறுதிக்குள் உறுதி செய்து விடுவோம் என்று கிளாசிக் கிரியேட்டர்ஸ் தயாரிப்பாளர்களில் ஒருவரான எச்.முரளி, தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. துணைத் தலைவர் பதவி: யஷ்வந்த் சின்ஹா திடீர் ராஜிநாமா

புதுடில்லி, ஜூன் 15

பா.ஜ.க. துணைத் தலைவர் பதவியிலிருந்து யஷ்வந்த் சின்ஹா திடீரென ராஜிநாமா செய்துள்ளார். மேலும், கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவிலிருந்தும் அவர் விலகியுள்ளார்.

தனது ராஜிநாமா குறித்த முடிவை அவர் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்கிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்குத் தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பு வகித்த அருண் ஜெட்லியும் ஒரு காரணம் என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார் என தகவல்கள் கூறுகின்றன. இதே கருத்தை யஸ்வந்த் சிங்கும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

யஷ்வந்த் சின்ஹா ராஜிநாமா செய்ததை குறித்து ராஜ்நாத் சிங்கிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அவரது ராஜிநாமாக் கடிதம் தனக்குக் கிடைக்கவில்லை என்றும், ஊடகங்கள் மூலம்தான் அவர் ராஜிநாமா செய்திருப்பது தனக்குத் தெரியும் என்றும் தெரிவித்தார்.

பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் பின்னடைவு குறித்து ஓகஸ்டில் விவாதக் கூட்டம் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நடிகர் கமலுக்கு 4 விருதுகள்

சென்னை, ஜூன் 15

விஜய் ரீ.வி. ஆண்டுதோறும் நடத்திவரும் தமிழ் சினிமாவில் சிறந்த நடிகர் - நடிகைகளுக்கான விருது வழங்கும் விழாவில் நடிகர் கமலஹாசனுக்கு 4 விருதுகள் கிடைத்தன.

2008ஆம் ஆண்டுக்கான விருதுகள் சென்னையில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்த இந்த விழாவில் ரசிகர்களின் சிறந்த அபிமான நாயகனாக நடிகர் கமலஹாசன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தசாவதாரம் படத்தில் 10 வேடத்தில் நடித்த கமலஹாசனுக்கு அந்தப் படத்தில் வில்லன் பாத்திரத்துக்காக சிறந்த வில்லன் விருதும், பல்ராம் நாயுடு பாத்திரத்தில் நகைச்சுவை செய்ததற்காக சிறந்த நகைச்சுவை நடிகர் விருதும், தசாவதாரம் படத்தின் கதையை உருவாக்கியதற்காக சிறந்த கதாசிரியர் விருதும் வழங்கப்பட்டன. 4 விருதுகளையும் கமலஹாசன் பெற்றுக்கொண்டார்.

விழாவில் கமலஹாசன் பேசும்போது, நான் முதன்முதலில் வில்லனாக நடித்த பின்னரே கதாநாயகனானேன். இந்த வகையில் எனக்கு வில்லன் நடிப்புக்காகவும் விருது கிடைத்திருப்பது பெருமையாக இருக்கிறது - என்றார்.

# தலைமன்னார் கடலுக்குச் செல்ல இராமேஸ்வரம் மீனவருக்குத் தடை

இராமேஸ்வரம், ஜூன் 15

இலங்கை தலைமன்னார் கடற்பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லக் கூடாது - என்று மீனவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள ஒன்பது மீனவர்கள் மற்றும் இரண்டு படகுகளை இலங்கை அரசு ஜூன் 15 ஆம் திகதி விடுவிப்பதாக தகவல் வந்ததைத் தொடர்ந்து, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்ற இராமேஸ்வரம் மீனவர்கள் நான்கு நாள்களுக்குப்பின் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

இதையொட்டி துறைமுக அலுவலகத்தில் மீன்துறை அதிகாரிகளால் 700 இற்கும் மேற்பட்ட படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

கடற்கரை அந்தோணியார் ஆலயம் முன் கூடிய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்த மத்திய, மாநில அரசுகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, இலங்கை தலைமன்னார் கடற்கரைப் பகுதிக்குள் மீனவர்கள் செல்வதை தவிர்க்கவும்' கேட்டுக்கொண்டனர். இதைத் தொடர்ந்து, இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை தலைமன்னார் கடற்கரைப் பகுதிக்குள் செல்லக்கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சில நாள்களுக்கு முன் தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை வந்துள்ள நிலையில் இறால் மீன் பிடிக்கும் ஆசையில் எச்சரிக்கையை மீறி தலைமன்னார் கடல் பகுதிக்குள் செல்லும் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் தொடுக்கும் வாய்ப்பு உள்ளது என புலனாய்வு துறை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயவர்த்தனாவின் அதிரடியால் இலங்கைக்கு வெற்றி

## போராடித் தோற்றது அயர்லாந்து அணி



லண்டன், ஜூன் 15

சுப்பர்-8 சுற்றின் நேற்றைய ஆட்டத்தில் அயர்லாந்து அணிய்ய 9 ஓட்டங்களினால் வெற்றி கொண்ட்து இலங்கை அணி.

ஐ.சி.சி.ருவென்ரி- 20 உலகக் கிண்ணப் போட்டிகளின் குழு 'எப்' க்கான போட்டியில் நேற்று லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் அயர்லாந்து அணியை சந்தித்தது இலங்கை அணி. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாடிய இலங்கைக்கு முதலாவது ஓவரை வீசிய ரன்ஹீன் அதிர்ச்சியளித்தார். இத்தொடரில் சிறப்பாக ஆடிய டில்சானை ஓட்டமெதனையும் பெறாத நிலையில் பெவிலியன் அனுப்பி வைத்தார். அடுத்து வந்த அணித் தலைவர் சங்கக்காரவும் 3 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக சனத்ஜெயசூரியாவுடன் ஜோடி சேர்ந்த ஜெயவர்த்தனா சிறப்பாக ஆடினார். இந்த நிலையில் பொறுமையாக ஆடிய ஜெய சூரியா (27 பந்துகளில் 27 ஓட்டங்கள் 5 பௌண்டறிகளுடன்) மக்கலனின் பந்தில் எல்.பீ.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

நடுவரிசை, பின்வரிசை வீரர்கள் கை கொடுக்காத நிலையில் ஜெயவர்த்தனா மாத்திரமே அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். அணி 128 ஓட்டங்களைப் பெற்ற போது 6 ஆவது விக்கெட்டாக ஜெயவர்த்தனாவின் (78 ஓட்டங்கள் 9 பௌண்டறிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக) விக்கெட் ஹசாக்கினால் வீழ்த்தப்பட்டது.

ஏனைய வீரர்கள் அனைவருமே ஒற்றை இலக்க ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க முரளிதரன் ஓர் ஓட்டத்துடனும் மலிங்க 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர். 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

அயர்லாந்து சார்பில் பந்து வீசிய ஹசாக் 4 விக்கெட்டுக்களையும் ரன்ஹீன், மக்கலன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாட ஆரம்பித்த அயர்லாந்து அணியின் போர்ல்பீல்ட் 31 ஓட்டங்களுடன் முரளியின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் சங்கக்காராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஓ பிறைன் 31 ஓட்டங்களுடன் சங்கக்காராவினால் ஸ்ரொம்ப் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். மூனே 31 ஓட்டங்களையும் வெஸ்ட் ஒரு ஓட்டத்தினையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

அயர்லாந்து அணி சிறப்பாக ஆடிய போதும் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இலங்கை அணி சார்பில் பந்து வீசிய மெண்டிஸ் மலிங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முரளிதரன், குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கையணியின் வெற்றிக்கு களம் அமைத்துக் கொடுத்த மஹேல ஜெயவர்த்தனா (78) தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் குழு 'எப்' இல் 4 புள்ளிகளைப் பெற்று இலங்கையணி முதலிடத்திலும் நியூஸிலாந்து இரண்டாவது இடத்திலும் உள்ளன. (6)



மியன்மாருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு தமக்கு அளிக்கப்பட்ட இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்...

## 50 ஊடகவியலாளர்களுக்கு புலிகளுடன் தொடர்பா? விவரங்களை வெளியிடக் கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜூன் 15

50 ஊடகவியலாளர்கள் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்தனர் என்று கூறப்படுகின்றமை உண்மை என்றால் அரசு அவர்களின் பெயர்களை உடன் வெளியிட வேண்டும் என்றும் அவர்களுக்கு ஒளிந்திருந்து தாக்குதல் நடத்தாமல், அவர்களை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பியான பாலித ரங்கே பண்டாரவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவுற்றபோதிலும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்கு[illegible] நிறுத்தப்படவில்லை. அவர்கள் கட[illegible]ச் செல்லப்பட்டு, கால்கள் உடை[illegible]டுகின்றன.

ஆனால், புலிகளுக்கு உதவிபுரிந்த 50 ஊடகவியாலாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அரசு தெரிவிக்கின்றது. ஆனால், அவர்கள் யார் என்று சொல்ல மறுக்கின்றது.

**கருணா அம்மான், தயாமாஸ்டர் இப்போது அரசிடம் உள்ளனரே!**

பொதுவாக தப்புச் செய்தவர்களுக்குத் தான் தண்டனை அதிகம். தப்புச் செய்தவர்களுக்கு உதவிபுரிந்தவர்களுக்கு குறைந்தளவில் தான் தண்டனை வழங்கப்படும்.

பயங்கரவாதியாக இருந்து இந்த நாட்டுக்கு மாறுபடும் தப்புகளைச் செய்த கருணா அம்மான், பிள்ளையான், தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்ரர் போன்றவர்களை அரசு தன்னோடு வைத்துள்ளது.

ஆனால், புலிகளுக்கு ஆதரவு வழங்கினார்கள் என்று சொல்லப்படுபவர்கள் மீது அரசு தாக்குதல் நடத்துகிறது. அப்படி உதவி புரிந்தனர் என்றால் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படல் வேண்டும்.

50 ஊடகவியலாளர்கள் புலிகளுக்கு உத வினர் என்று அரசு கூறுகிறது. அப்படியென்றால் ஏன் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? ஊடகவியலாளர்களின் கால்களை உடைக்காமல் இதைச் செய்யலாம் தானே - என்றார். (அ-சி)

## குறிகாட்டுவான் ஊடாக மன்னாருக்கு விளையாட்டு வீரர்கள் செல்ல ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மன்னாரில் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் மாணவர்களுக்கு குறிகாட்டுவான் ஊடாக படகுச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது அணி எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தப் பாதையூடாக மன்னாருக்கு செல்லவிருக்கிறது.

யாழ். கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

அங்கு சமுகமளித்திருந்தவர்களுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்மதி ஊடாக கலந்துரையாடினார்.

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.உதயன் தலைமையில் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

* குறிகாட்டுவான் ஊடாக படகுகள் மூலம் மன்னாருக்குச் செல்ல கடற்படையினர் ஒத்துழைப்பு வழங்குவர்.
* இந்தப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் 1200 மாணவர்களுக்கும் பயிற்றுநர், அதிபர்களுக்கும் மொத்தம் 1400 பேருக்கு உணவுச் செலவுக்காக 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும். (1-325)

## ஒவ்வொரு அமைச்சுக்கும் மாதாந்தம் 9 லட்சத்து 28 ஆயிரம் ரூபா செலவு

### வீண் விரயம் என்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு, ஜூன்15

அமைச்சு ஒன்றை நடத்திச் செல்வதற்கு அரசு மாதம் ஒன்றுக்கு 9 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவை மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவு செய்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பியான பாலித ரங்கே பண்டாரவே இதைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்வதே அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை. ஆனால் அரசு இதைச் சரியாகச் செய்வதாகத் தெரியவில்லை.

அமைச்சர்கள் அவர்களுக்காகவும் அவர்களின் உறவினர்களுக்காகவுமே வேலை செய்கின்றனர். நாட்டு மக்களைப் பட்டினியில் இருக்குமாறு கூறிவிட்டு அமைச்சர்கள் அம்மக்களின் பணத்தில் சுகபோகம் அனுபவிக்கின்றனர்.

அரசு, அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாதம் ஒன்றுக்கு ஓர் அமைச்சை நடத்துவதற்கு அரசு 9 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவைவைச் செலவு செய்கின்றது.

இந்த இலட்சணத்தில் தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இரண்டு எம்.பிக்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படப் போகின்றன. இதனால் இந்தச் செலவு இன்னும் அதிகரிக்கப் போகின்றது.

இந்த அமைச்சர்கள் இந்நாட்டின் மீதும், நாட்டின் மக்கள் மீதும் அன்பு கொண்டவர்கள் என்றால் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்து சிறிய அமைச்சரவையை நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு உதவ வேண்டும்.

அப்படிச் செய்தால் எமக்குப் பணம் மிஞ்சும். எமது நாட்டின் தேவைகளை நிறைவேற்ற வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டிய தேவையும் ஏற்படாது - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தியாகராசா

(இளைப்பாறிய தீயணைப்பு நிலைய அதிகாரி, கொழும்பு)

திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தியாகராசா நேற்று (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - லக்சுமி தம்பதியரின் மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சற்குணராஜா (U.K), இராஜேஸ்வரி, அருள்ராஜா (U.K) ஆகியோரின் தந்தையும் கணேசமூர்த்தி (கட்டடத் திணைக்களம் (மத்தி) யாழ்ப்பாணம்), ரூபா (U.K), தர்சினி (U.K) ஆகியோரின் மாமனாரும் வாகீசன் (U.K), மதீசன், சஜிதன், கஸ்தூரியா, பிரவீன் (U.K), லக்சன் (U.K), அஸ்வினி (U.K) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகன் லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*
*060 221 6707*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# இங்கிலாந்தை கலைத்த இந்தியா 3 ஓட்டங்களில் வீழ்ந்தது! அரையிறுதித்தகுதியை இழக்கும் பரிதாப நிலை!!

லண்டன், ஜூன் 15

ஐ.சி.சி.ருவன்ரி - 20 உலகக்கிண்ணத் தொடரில் சுப்பர் -8 சுற்றில் நேற்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து இந்திய அணியை 3 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று நடந்த குழு 'ஈ'க்கான போட்டியில் இங்கிலாந்து அணியும் இந்திய அணியும் பலப்பீட்சை நடத்தின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தைப் பெற்ற இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. பீற்றர்சன் 27 பந்துகளுக்கு முகங்கொடுத்து 5பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்களையும் போபரா 3பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 37 ஓட்டங்களையும் குவித்தனர்

இந்திய அணி சார்பில் பந்து வீசிய ஹர்பயன்சிங் 3 விக்கெட்டுக்களையும் ஜடேஜா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

154 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி ஓட்டங்களை வேகமாகப் பெற முற்பட்டு விக்கட்டுகளை இழந்தது. இதனால் இந்திய அணி நிதானமாக ஆட ஆரம்பித்தது.

இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ரோசித் சர்மா 09 ஓட்டங்களுடன் பொத்தமின் பந்தில் போல்டானார். கம்பீர் 26,

ICC WORLD TWENTY20 ENGLAND 09

APPAREL APPROVAL PAGES

ரெய்னா 2, ஜடேஜா 25, யுவராஜ் சிங் 17, என ஆட்டமிழக்க அணித்தலைவர் டோனியும் யூசுப்பதானும் தமது அதிரடியைக் காட்டினார்கள்.

தோனி 20 பந்துகளில் 30ஓட்டங்களையும் யுசுப்பதான் 17 பந்துகளில் ஒரு பௌண்டறி 2சிக்ஸர்களுடன் 33 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றபோதும் இந்திய அணியினால் 5 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 3 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இங்கிலாந்து சார்பில் பந்து வீசிய சைட்பொத்தம் ஸ்வான் ஆகியோர் தலா 2 விக்கட்டுகளை வீழ்த்தினர்.

இத் தோல்வியுடன் சுப்பர் -8 சுற்றில் தான் எதிர் கொண்ட 2 போட்டிகளிலும் தொல்வியைத் தழுவிய இந்திய அணி புள்ளி எதனையும் பெறாது இறுதி இடத்திலும் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவை முதலிரண்டு இடங்களிலும் உள்ளன. (6)

(மற்றொரு செய்தி 15 ஆம் பக்கத்தில்)

## இன்றைய ஆட்டங்கள்

**முதலாவது ஆட்டம்**

**அணிகள்** : இங்கிலாந்து - மே.இ.தீவுகள்

**மைதானம்** : ஓவல் மாலை 6 மணி

**இரண்டாவது ஆட்டம்**

**அணிகள்** : பாகிஸ்தான் - அயர்லாந்து

**மைதானம்** : ஓவல் இரவு 10 மணி

# தமிழக மீனவர்களை கச்சதீவு அருகே சுற்றிவளைத்து இல.கடற்படையினர் தாக்குதல்

இராமேஸ்வரம், ஜூன் 15

க்ச்சதீவுக் கடலருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுற்றிவளைத்துத் தாக்கபட்டனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரம் மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்த வழியாக 3 கப்பல்களில் ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை கண்டதும் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர் -

அதன் பின்னர் அங்கிருந்து சென்று விடுமாறு மீனவர்களை எச்சரித்தனர். இலங்கை கடற்படையினரின் மிரட்டலை தொடர்ந்து இராமேஸ்வரம் மீனவர்கள் தங்கள் வலைகளை எடுத்துக் கொண்டு கரை திரும்பும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் அதற்குள் இலங்கை கடற்படையினர் 10இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளை சுற்றி வளைத்தனர். பின்னர் மீனவர்களின் படகுகளுக்குள் இறங்கி அவர்களைத் தாக்கினர். மேலும் அவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த இறால் மீன்களை எடுத்துக்கொண்டு சென்று விட்டனர்.

பின்னர் கரை திரும்பிய மீனவர்கள் தாங்கள் தாக்கப்பட்டமை குறித்தும், கஷ்டப்பட்டு பிடித்த விலைஉயர்ந்த மீன்கள் பறிபோனது பற்றியும் படகு உரிமையாளர்களிடம் தெரிவித்தனர். (அ-சி)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்ற காரணத்தினால் இங்கு மட்டும் காலை ஆறு மணியிலி ருந்து மாலை நான்கு மணிவரை மீன் பிடிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மீனவர்கள் இனிமேல் 25 குதிரை வலு கொண்ட மீன்பிடிப் படகுகள் மூலம் மீன்பிடிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையில், சேருநுவர பொலிஸ் பகுதியில், பொலிஸார் சனிக் கிழமை யன்று தேடுதல் நடவடிக்கை மேற் கொண்ட போது இந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

ரி56 ரக துப்பாக்கிகள் இலகுரக இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் தற்கொலை அங்கிகள் ஆகியவை அங்கு கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட பிறகு கிழக்கு மாகாணத்தில் ஓர் இடத்தில், ஒரே நாளில் கைப்பற்றப்பட்ட அதிகளவிலான ஆயுதங்கள் இவை தான் என்றும் அவர் சொன்னார். (அ-1)

## தனியார்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களையும் குறைத்துள்ளனர் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனங்கள் செலவைக் குறைப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு இறுதியிலேயே தமது உள்ளூர் தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. இதனால் பலர் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு வேலை இழந்த பலர் நஷ்டஈட்டைப் பெறவில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-சி)

## வடக்கு உள்ளூராட்சி தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்குமாறு - கூட்டமைப்பின் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவினர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியபின் இலங்கை திரும்புகின்றனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா நேற்று மாலை கொழும்பு திரும்பினார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்புவார்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய வேண்டிய காலம் நெருங்கி வந்த நிலையில், வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாளுக்கு முன்னதாக தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் கடிதத்தை கூட்டமைப்பின் சார்பில் க.துரைரட்ணசிங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வேட்பு மனுப் பத்திரங்களைப் பெறுதல், வேட்பு மனுத் தாக்கல் செய்தல் போன்ற பணிகளுக்காக தமது அதிகார மளிக்கப்பட்ட முகவராக எஸ். எக்ஸ் குலநாயகத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளரான மாவை சேனாதிராசா நேற்று நியமித்துள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான கடிதம் தேர்தல் ஆணையாளருக்கு நேற்று கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி யாழ். தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர் வரும் வியாழக்கிழமை முதல் 25 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக தமிழர் முன்னணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி), ஐ.தே.க, தமிழரசுக்கட்சி, சுயேச்சைக்குழு ஆகியன தமது தேர்தல் முகவர்களை நியமித்து தேர்தல் திணைக்களத்துக்கு கடிதங்களை அனுப்பியுள்ளன. (அ-1)

## உரிமை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாப நிதிகளைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இது தொடர்பாகத் தேசிய தொழிலாளர் ஆலோசனைக் கவுன்ஸிலின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது எனவும் இம்மாத இறுதிக்குள் இது குறித்துத் தீர்மானிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

உரிமை கோரப்படாத பலகோடி ரூபாய்களை அரசு பயன்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராய்வதற்காகத் தொழிற்சங்கம், அரச ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவினர் இம்மாத இறுதிக்குள் இது தொடர்பாகத் தீர்மானிக்கவுள்ளனர்.

இதேவேளை சர்வதேச நிதி நெருக்கடி காரணமாக, வேலை வாய்ப்பை இழந்த ஆடைத் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு மற்றும் நிதியுதவியை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது என்பதைத் தொழில் அமைச்சர் உறுதி செய்துள்ளார். (அ-சி)

## அகதிமுகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள அவர், பட்டினி காரணமாக ஒரே நாளில் 14 முதியவர்கள் இறந்தனர் என்பதை வவுனியா நீதிபதியொருவர் தெரிவித்ததையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

முகாமில் உள்ள 3 லட்சம் மக்களையும் விசாரணை செய்த பின்னரே சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டுள்ள அவர், மக்களை விசாரணைக்கு உட்படுத்தப்படும் பகுதிகளுக்கு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் செல்ல அனுமதிக்க வேண்டுமெனக் கோரியுள்ளார்.

**மனிக்பாமில் இருந்து 200 இளைஞர்களை ஆயுதக்குழுக்கள் கூட்டிச் சென்றன**

கடந்த வாரம் வவுனியா மனிக்பாம் முகாமிலிருந்து 17 வயதிற்கு உட்பட்ட 200 இளைஞர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர் எனத் தெரிவித்துள்ள அவர் அரசு இவர்கள் குறித்த விவரங்களை வெளியிடவில்லை. இவர்களது பெற்றோர்கள் மிகவும் அச்சத்துடன் காணப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''அரசு தன்னிடம் சரணடைந்தவர்களில் 10 ஆயிரம் விடுதலைப் புலிகள் உள்ளனர் எனத் தெரிவிக்கின்றது. அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர், அவர்கள் யார் என்பது எமக்குத் தெரியாது'' என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-சி)





BEACON - யாழ்.நகர்
(NEW SCIENCE CENTER)
A/L 2011
Physics - G.Pirab (B.Sc.)
Thu, Fri - 2.30 - 3.30 p.m.
Chemistry - G.B.Rajothayan (B.Sc.)
Tue, Thu - 3.30 - 4.30 p.m.
ஆரம்பம்: 18.06.2009 வியாழன்

SCC கணினி பயிற்சி நெறிகள்
பயிற்சி ஆரம்பம் 17.06.2009,20.06.2009
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
♦Adobe Photoshop ♦Adobe Premier ♦Cool3D Studio ♦pinnacle Studio ♦VCD Cutter ♦ Capturing
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
♦Tally. Quick Books + Accpack + MYOB
DIPLOMA IN AUTOCAD
Softview Computer College
55, Arasady Road, Jaffna.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.